விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 18 திங்கட்கிழமை (02.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 073




# இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்தது



## ஆயுதங்களை வைத்தால் மட்டுமே புலிகளுடன் பேச்சு -பாலித கோஹன்ன

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்திற்கு வந்துள்ளனர். இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி மோதலில் சிக்கியுள்ள பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்ல இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற இந்திய அரசின் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது. ஆயுதங்களை கீழே வைத்தால் மட்டுமே புலிகளுடன் பேச முடியும் என இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் லண்டனில் தீக்குளிப்பு

(லண்டன்)

லண்டன் நகரில் நாடாளுமன்றக் கட்டிடம் முன்பு ஒரு இலங்கைத் தமிழர் தன் தலையில் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு தீ வைத்துக் கொண்டார். அவர் உடல் முழுவதும் தீ பற்றி எரிந்ததைப் பார்த்த பொதுமக்கள் இது குறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

பொலிஸார் அவரைக் காப்பாற்றி அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். உடலில் தீக் காயங்களுடன் அவர் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் பெயர் விபரங்கள் தெரியவில்லை. அவருக்கு 43 வயது இருக்கும் என்று கூறப்படுகிறது. (ச-5)

## ஐ.நா. கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிர்ப்பு வராது

### அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

ஜெனீவாவில் இன்று ஆரம்பமாகவிருக்கும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் எதனையும் தாம் எதிர்பார்க்கவில்லையென மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எமக்கு எதிரான பிரேரணைகள் எதுவும் முன்வைக்கப்படக் (12ஆம் பக்கம் பார்க்க)

## கொமாண்டோ அணிகளைக் கொண்டு விடுதலைப் புலிகள் தாக்குதல்

### 'லக்பிம' தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் சிறிய கொமாண்டோ அணிகள் படையினரின் நிலைகளுக்குள் ஊடுருவி தாக்குதலை நடத்தியுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் லக்பிம வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக லக்பிம வார ஏட்டின் பாதுகாப்பு பத்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகளின் 15பேர் கொண்ட அணி முதலாவது சிங்க றெஜிமென்ட் பற்றலியன் நிலைகொண்டிருந்த பகுதிக்குள் கடந்த வாரம் ஊடுருவிய போது கடுமையான சமர் மூண்டது.

இத்தாக்குதலின் (12ஆம் பக்கம் பார்க்க)

## 7 ஆயிரம் தமிழர்கள் இணைந்து பிரான்ஸில் ஆர்ப்பாட்டம்

(பாரிஸ்)

இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்கக் கூடாது என்பதை வலியுறுத்தி பிரான்ஸ் வாழ் தமிழர்கள் மாபெரும் கண்டன ஊர்வலத்தை பாரிஸில் நடத்தியுள்ளனர்.

தமிழ் இளையோர் அமைப்புடன் அனைத்துலக வர்த்தகக் கல்லூரியின் மாணவர் அமைப்பினர் இணைந்து நேற்று முன்தினம் இக் கண்டன ஊர்வலத்தை ஏற்பாடு செய்தனர்.

பாரிஸின் புகழ்பெற்ற பிரெஞ்சுப் புரட்சியின் குறியீடாக விளங்கும் பாஸ்ரில் சதுக்கத்தில் இருந்து பிற்பகல் 2.30 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 5.30 மணிக்கு குடியரசு சதுக்கத்தை கண்டன (12ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்கள் இலங்கையில் அதிகரிப்பு

### அமெரிக்கா கவலை

(வாஷிங்டன்)

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மோசமடைந்து வருகின்றன. அங்கு 16 வீத மக்கள் தொகையைக் கொண்ட தமிழ் மக்களில் இளைஞர்கள் அதிகளவில் கொல்லப்படுவதுடன் காணாமலும்போய் உள்ளனர் என அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை திணைக்களம் வெளியிட்டுள்ள 2008ஆம் ஆண்டுக்கான மனித உரிமை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்று 42 பேர் எறிகணைத் தாக்குதலில் பலி

(கொழும்பு)

வன்னியில் நேற்று நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 42 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் 85 பேர் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு, மாத்தளன் பகுதிகளில் நேற்று அதிகாலை 4.30 மணி தொடக்கம் நடத்தப்பட்ட ஆட்டிலறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் 37 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 65 பேர் (12ஆம் பக்கம் பார்க்க)




போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef




அவசர அம்புலன்ஸ் சேவைக்கு

அழையுங்கள்

110

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால், பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு இச்சேவை வழங்கப்படுகிறது.

Trauma Secretariat UMCOR USAID MEDICAL TEAMS INTERNATIONAL World Health Organization Sri Lanka

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயிர் செய்து பயன்பெற வேண்டிய நிலத்தில் கண்ணி வெடிகளை விதைத்து அழிவு ஏற்படுகிறது

## பொன்னையா ஜோசப் ஆண்டகை கவலை

(மட்டக்களப்பு)

பயிர் செய்து பயன்பெற வேண்டிய நிலத்தில் மனிதன் கண்ணி வெடிகளை விதைத்து அழிவுகளை ஏற்படுத்துவதாக மட்டக்களப்பு திருகோணமலை துணை ஆயர் வண. பொன்னையா ஜோசப் ஆண்டகை கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் சிறுவர்கள் கலந்து கொண்ட கண்ணிவெடி அற்ற உலக தினம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இந்த கவலையை அவர் வெளியிட்டுள்ளார்.

யுனிசெப் அனுசரணையுடன் சர்வோதயம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் கண்ணி வெடி அபாயம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறுவர்கள் கலந்து கொண்ட பேரணியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் 10 வருடங்களுக்கு முன்பு கனடாவில் கண்ணிவெடி அற்ற உலகம் தொடர்பான ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டபோது உலகில் 40 நாடுகளே இணைந்திருந்தன. தற்போது அந்த எண்ணிக்கை 150 ஆக அதிகரித்தாலும் இன்னும் பல நாடுகள் அதில் இணையாமல் இருப்பது கவலைக்குரியது.

எங்கெல்லாம் யுத்தம் நடக்கிறதோ அங்கெல்லாம் கண்ணிவெடிகள் புதைக்கப்படுகின்றன. இது மனிதனின் உள்ளத்திலுள்ள பழிக்குப்பழி, மன்னிக்கமுடியாத, மறக்கமுடியாத ஒருவரின் அழிவில் மற்றவர் இன்பம் காணல் போன்ற குண இயல்புகளை வெளிப்படுத்துகிறது

இப்படியான குண இயல்புகள் மனிதனில் இருக்குமானால் அழிவுகளைத் தவிர வேறு எதுவும் ஏற்படாது என்றார்.

இதேவேளை யுத்தகாலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடி அகற்றும் பணிகளில் 3 அரசசார்பற்ற நிறுவனங்களும் இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவும் ஈடுபட்டிருந்தன.

தற்போது இந்தப் பணி பூர்த்தி அடைந்துள்ளதால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள் குடியேற்றமும் 99 சதவீதம் நிறைவடைந்துள்ளது என மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு திட்டப்பணிப்பாளர் கே.சிவநாதன் தெரிவித்தார்.

அடுத்த சிலவாரங்களில் இதுவரை மீளக்குடியமர்த்தப்படாத ஒரு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களும் மீளக்குடியமர்த்தப்பட்டுவிடும். இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போது கண்ணி வெடிதொடர்பான அச்சுறுத்தல்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது என்றார்.

இந்நிகழ்வில் சர்வோதயம், யுனிசெப் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். (ச-5)

# கிழக்கில் வீதிப் பாதுகாப்புப் பணி ஊர்காவல் படையிடம் ஒப்படைப்பு

தென்பகுதியையும் கிழக்கு மாகாணத்தையும் பாதுகாப்பதற்கு போதியளவு படையினர் இல்லாததால் அவற்றின் பாதுகாப்பினை ஊர்காவல் படையினரிடம் ஒப்படைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; படை பலத்தில் பெருமளவானவை வடபகுதியில் குவிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய பகுதிகளின் பாதுகாப்புக்களை ஊர்காவல் படையினரிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மணலாறில் இருந்து ஜனகபுர பகுதி வரையிலுமான வீதிகளின் பாதுகாப்பு ஊர்காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று அம்பாறை மற்றும் பொலநறுவை பகுதிகளிலும் 500 ஊர்காவல் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தமது கிராமங்களுக்கு வெளியில் நிறுத்தப்படும் ஊர்காவல் படையினருக்கு மேலதிக கொடுப்பனவுகளும் இலவச உணவும் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

### பல்கலைக்கழக அனுமதி பெறும்

# வன்னி மாணவர்களின் விண்ணப்பங்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

வன்னியில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலைகளை அடுத்து அங்குள்ள பல்கலைக்கழக அனுமதி பெறக் கூடிய மாணவர்களின் நிலைமையினைக் கருத்திற் கொண்டு அவர்களைப் பல்கலைக் கழகங்களில் உள்வாங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார் என ஈ.பி.டி.பி.தெரிவித்துள்ளது.

வன்னியிலுள்ள, பல்கலைக்கழக அனுமதி பெறவிருக்கும் மாணவர்களினாலும் அவர்கள் நலன்சார்ந்த கல்விமான்களினாலும் இவ்விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் அமைச்சர் இந்நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

வன்னி மாவட்டங்களில் இருந்து க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக் கழக அனுமதி பெறக்கூடிய மாணவர்கள் தொடர்பில் உயர்கல்வி அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

தற்போது போக்குவரத்து, தொலை தொடர்பு மற்றும் அஞ்சல் சீர்குலைவு போன்ற காரணங்களினால் தமது பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பங்களை மேற்கொள்ள முடியாத வன்னி மாணவர்களின் நலனில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளதுடன் அம்மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் உள்வாங்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கடற்படைச் சிப்பாய் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

அதிக பனடோலை உட்கொண்ட கடற்படைச்சிப்பாய் ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரைநகரில் கடமைபுரியும் யு.ஏ.டி. சந்திரசிறி (வயது19) என்ற சிப்பாயே யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

இவர் உடனடியாக காரைநகர் கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-6)

# திறந்த பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் வியாபார முதுநிர்வாகமாணி (MBA)பட்ட நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் விண்ணப்பப் படிவத்தினை யாழ். பிராந்திய நிலையத்தில் பெறமுடியும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

● ● ●

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் 2009/10ஆம் கல்வியாண்டுக்கான பட்ட மேற் தொலைக்கல்வி டிப்ளோமா (PGDDE) சான்றிதழ் கற்றை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று கொள்ளமுடியும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

● ● ●

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் 2009ஆம் ஆண்டுக்கான மருத்துவக் கல்வி மற்றும் பாலியல் இனப்பெருக்க விருத்திக் கற்றை நெறிக்கான இதய ஆரோக்கிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்குரிய விண்ணப்பப்படிவத்தினை யாழ்.பிராந்திய நிலையத்திலும் ஏனைய பிராந்திய நிலையங்களிலும் பெறமுடியும். இதற்கு விண்ணப்பிப்பவர்கள் கட்டாயம் இள மருத்துவமாணி (MBBS) பட்டத்துக்குரியவர் அல்லது இலங்கை மருத்துவ சங்கத்தில் தம்மை பதிவுசெய்துள்ள மருத்துவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். (ச)

# ரணில் விக்கிரமசிங்கவை கட்சியில் இருந்து நீக்க கோரிக்கை

(கொழும்பு)

தலைமைப்பொறுப்பில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்க உள்ளதாகவும் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ஜனநாயகக் குழு உறுப்பினர்களையும் மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கோரியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமைத்துவத்தில் விரைவில் மாற்றம் ஏற்படுத்தப்படுமென கட்சி வட்டாரத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் மட்டுமே கட்சியை மீட்டெடுக்க முடியு மென அவர் தெரிவித்துள்ளார்.

தலைமைப்பொறுப்பிலிருந்து ரணில் விக்கிரமசிங்காவை நீக்குவது குறித்து உச்சகட்டமாக ஆராய்ந்து வருவதாகவும் ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)







கச்சாய் அ.த.க. பாடசாலையில் 'நிக்கொட்' இனால் 12.06 மில்லியன் ரூபா செலவில் கட்டி வழங்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் நாடாவெட்டி திறந்து வைப்பதனையும் கட்டிடத்தின் அழகிய தோற்றத்தையும் கட்டிட ஒப்பந்தகாரர் அன்ரன் இராஜசேகரம் தம்பதிகளுக்கு பிரதம விருந்தினர் நினைவுப் பரிசிலை வழங்குவதையும் காணலாம்.

(படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

# இன்று ஒரு தகவல்

## அது எங்கே இருக்கிறது?

ஒரு கிராமத்தில் சிறிய பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது.அங்கு ஆண்டு விழா நடந்து கொண்டிருந்தது.

அந்தக் கிராமத்திலுள்ள விடுதியொன்றில் ஓய்வெடுப்பதற்காக ஒருவர் வந்து தங்கியிருந்தார். அவரும் அந்த ஆண்டு விழாவிற்கு சென்றிருந்தார்.

அங்கு கண்காட்சி ஒன்று நடந்தது. மாணவர்கள் பல விதமான பொருட்களைக் கொண்டு செய்தவற்றைக் காட்சிக்கு வைத்திருந்தார்கள்.

அவ்வூர் மக்களெல்லாம் அதை ஆர்வத்துடன் பார்த் துக் கொண்டிருந்தார்கள்.

இவரும் ஆர்வமாக அவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டே போனார்.ஒரு இடத்தில் சிறிய மின்சார ரயில் செய்து வைத்திருந்தார்கள். பொத்தானை அழுத்தி யவுடன் அது சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தது. மாணவர்களும் அதற்கு விளக்கமளித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர் அதைக் கவனித்தார். அங்கிருந்த மாணவர்களிடம் விளையாட்டாக ,

" இந்த ரயில் எதனால் ஓடுகிறது? " என்று கேட்டார்.

"சக்தியினால் ஓடுகிறது " என்றார்கள்.

" அது என்ன சக்தி? " என்றார்.

" மின்சாரம் " என்றார்கள்.

"நீங்கள் மின்சாரத்தைப் பார்த்திருக்கிறீர்களா?" என்றார்.

"நாங்கள் பார்த்ததில்லை.ஆனால் இதைச் செய்வதற்கு எங்களுக்கு உதவி செய்த ஆசிரியர் ஒரு பட்டதாரி. ஒருவேளை அவர் பார்த்திருக்கலாம்" என்று சொல்லி விட்டு அவரை அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

அவரிடம் இவர் , "மின்சாரத்தைப் பார்த்திருக்கிறீர்களா" என்றார்.

" மின்சாரத்தைப் பார்க்கிறதாவது? நான் பார்த்ததேயில்லை...

நான் பார்த்தது அது செயல்படும் விதத்தைத்தான் ! அது விளக்கை எரியச் செய்கிறது. ரயிலை ஓடும் படி செய்கிறது. இதே மாதிரி எத்தனையோ இயந்திரங்களைச் செயல்படவைக்கிறது. ஆனால் உண்மையில் அது என்னவென்றே எனக்குத் தெரியாது.

ஒரு வேளை இந்தப் பள்ளிக் கூடத்தின் தலைமையாசிரியருக்குத் தெரிந்திருக்கலாம் . ஏனெனில் அவர் ஒரு மேல் நிலைப்பட்டதாரி" என்றார்.

சரி என்று போய் ,தலைமையாசிரியரைக் கூட்டி வந்தார்கள். அவரிடமும் இதே கேள்வியைக் கேட்டார்கள்.

" மன்னிக்க வேண்டும். இந்தக் கேள்வியை இது வரை யாரும் கேட்டதில்லை .சக்தியை யாரும் பார்க்க முடியாது.ஆனால்அது செயற்படும் விதத்தைத்தான் பார்க்க முடியும் "என்றார்.

இப்பொழுது இது வரைக்கும் கேட்டுக் கொண்டிருந்தவர் சிரித்தார். சிரித்து விட்டு , " சரி...அதற்கொன்றும் கவலைப்படாதீர்கள்.என்னுடைய பெயர் தோமஸ் அல்வா எடிசன் " என்றார்.

இதைக் கேட்டதும் அங்கிருந்தவர்களுக்கு ஆச்சரியம்! அதிர்ச்சி!

" என்ன...நீங்கள் தானா எடிசன்? எவ்வளவு மின்சார உபகரணங்களையெல்லாம் உண்டாக்கியிருக்கிறீர்கள். நீங்களா இந்தக் கேள்வியைக் கேட்பது? " என்றார்கள்.

" ஆமாம்...நான் தான் கேட்கிறேன். ஏனெனில் நானே மின்சாரத்தைப் பார்த்ததில்லை " என்றார் அவர்.

அன்பும் இப்படிப்பட்டது தான்! என்கிறார் ஓஷோ.

அன்பு என்பது நம் உடற் கூற்று அமைப்பில் இல்லை. அது நம் உடம்பில் உள்ள சுத்த சக்தியின் வெளிப்பாடு. அதை உணரத்தான்முடியும். பார்க்க முடியாது.

"அன்பே உன்னை இதயத்துக்குள் வைத்திருக்கிறேன் " என்பான்.

இது மருத்துவர்கள் சொல்லும் இதயம் அல்ல.

கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தி!

"என்னுடைய இதயம் மிகவும் விசாலமானது சேர்..." சேர்... என்றார் ஒருவர்.

" அப்படியா? " என்றேன்.

"ஆமாம்...டாக்கடர் அப்படித்தான் சொல்கிறார். கொஞ்சம் வீங்கிப் போய் பெரிதாக இருக்குதாம் " என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாடளாவிய சேவைகளுக்காக நடத்தப்படும் பரீட்சைகளுக்கு பதிலாக ஒரு பரீட்சை

## இவ் வருடம் முதல் அமுல்படுத்த பொதுநிர்வாக அமைச்சு தீர்மானம்

நாடளாவிய சேவைகளுக்காக நடத்தப்படும் பல்வேறு பரீட்சைகளுக்குப் பதிலாக ஒரு பரீட்சையை நடத்துவதற்கான திட்டத்தை இந்த வருடம் நடைமுறைப்படுத்துவதற்கு பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறி வித்தல் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் டி.திஸ்ஸநாயக்க தெரிவிததார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

முகாமைத்துவம், திட்டமிடல் , கணக் காய்வு, கால்நடை உற்பத்தி, கட்டட நிர்மாணம் , பொறியியல் மற்றும் விஞ்ஞானம் ஆகிய சேவைகள் நாட ளாவிய சேவைகளாக கருதப்படுகின்றன. இந்த துறைகளில் நிலவும் சேவை வெற்றிடங்களுக்கு புதி தாக ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் 8 அல்லது 9பரீட்சைகள் நடத்தப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த பரீட்சைகளுக்கு பதிலாக ஒரு பரீட்சையை மாத்திரம் நடத்தி தகுதியுடையவர்களை தெரிவு செய்ய முடியுமென வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அரச சேவைகள் ஆணைக்குழுவுடன் பேச்சு வார்த்தைகளைஆரம்பித்துள்ளதாகவும் பல்கலைக்கழகங்களிலி ருந்து பட்டதாரிகள்வெளியேறும் காலஎல்லையைக் கருத்தில் கொண் டு பரீட்சைக்கான கால அட்டவணை யைத்தயாரிப்பதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

பல்கலைக்கழக பரீட்சைகளில் தோற்றி பெறுபெறுகளை எதிர்பார்த்துள்ளவர்களும் இந்த பரீட்சையில் தோற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அவர்களுக்கான பல்கலைக் கழக பெறுபேறுகள் நாடளாவிய சேவைகளுக்கான தகுதிகாண் நேர்முக தேர்வுக்கு முன்னர் வெளியாகி இருக்க வேண்டுமென பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய திட்டத்தை பொது நிர்வாக அமைச்சின் கீழ் உள்ள முகாமைத்துவம்,பொறியியல் ,கட்டட நிர்மாணம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்காக முதலில் அறி முகப்படுத்துவது குறித்து அமைச்சு ஆலோசித்து வருவதாக அமைச்சர் டி.திஸ்ஸ நாயக்க மேலும் தெரிவித்தார்.(6)

# இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் 54 ஆயிரம் பேர்வரை வேலை இழப்பு

(கொழும்பு)

பொருளாதாரம் வேகமாக வீழ்ச்சி கண்டு வரும் நிலையில் 54 ஆயிரம் பேர் வேலை இழந்து ள்ள தாக தெரி விக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.உலக பொருளாதார நெருக்கடி இலங் கையை கடுமையாகப் பாதித்து வரு கின்றது.

இலங்கையில் உள்ள53 ஏற்றுமதி நிறுவனங்கள்மூடப்பட்டுள்ளன. இதனால் 54ஆயிரம் பேர் வேலை வாய் ப்புக்களை இழந்துள் ளனர்.

ஆடைஉற்பத்தி, கட்டுமானத் துறை, வெப்பஆடைஉற்பத்தி ,சீமெந்து உற்பத்தி,இரத்தினக்கல் ஏற்றுமதி , நிதி முகாமைத்துவ நிறுவனங் களே அதிகளவில் மூடப்பட்டுள் ளன.

எதிர்வரும் மாதங்களில் மேலும் பலர் வேலை இழப்புகளை சந்திக் கலாம் என வர்த்தக சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க எச்சரிக்கை விடுத் துள்ளார்.

கட்டுநாயக்க ,பியகம ,கோகல பகுதிகளில் உள்ள சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள பல நிறு வனங்கள் தமது பணியாளர்களுக்கு ஊதியங்களை வழங்குவதற்கு பாரிய நெருக்கடியை எதிர்நோக்கி உள் ளன.

பணியாளர்களுக்கான மேலதிக கொடுப்பனவுகள், பயணக் கொடுப்பனவுகள், மேலதிக நேர வேலை போன்றவற்றை இந்த நிறுவனங்கள் நிறுத்தியுள்ளன. சில நிறுவனங்கள் தமது பணியாளர்களைவிடுமுறையில்அனுப்பியுள்ளன.

கம்பகா மாவட்டத்தில் உள்ள சினோரெக்ஸ்ஆடை உற்பத்தி நிறுவனம் மூடப்பட்டதனால் 3ஆயி ரம் பேர் வேலை இழந்துள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் உள் ள கிறிஸ்ற் லங்கா மூடப்பட்டதனால் 2 ஆயிரம்பேர் வேலை இழந் துள் ளனர் எனஅவர் மேலும் தெரிவித் துள்ளார்.(6)




யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட வங்கி ஓய்வூதியர்கள் கௌரவிப்பு நிகழ்வில் சிறப்பு கௌரவம் பெற்ற அதிமூத்த வங்கி ஓய்வூதியர்களான எஸ். தனராஜா(இலங்கைவங்கி) , ஏ.விநாசித்தம்பி (மக்கள் வங்கி) பி.விவேகானந்தன் (இலங்கை வர்த்தக வங்கி ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

27.02.2009
(மாசி 15, வெள்ளிக்கிழமை)
துதியை முற்பகல் 8.01 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 10.30 மணிவரை
இராகுகாலம் 10.58- 12.28 மணிவரை
சுபநேரம் 6.28-7.58 மணிவரை
மந்திகை கண்ணகை அம்மன் தீர்த்தம்
சித்தாமிர்தம்

| | |
|---|---|
| மேடம் | உணர்ச்சி வசப்படல், காரிய அலைச்சல், சுபசெலவு, பிதா சிந்தை. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, பெருமையடைதல். |
| மிதுனம் | கடின உழைப்பு, நண்பர்கள் உதவி,பணவருவாய், இனிய செய்தி. |
| கடகம் | அச்சமான நிலை, புதியமுயற்சி, பிரயாணம், எதிர்பாராத செலவு. |
| சிங்கம் | தேவையற்ற பகை, காரிய தடங்கல், பணக்குறைவு, உடல் நலக்குறைவு. |
| கன்னி | ஆபூர்வ சந்திப்பு, பிரயாண அனுகூலம், முயற்சி கைகூடும், தனலாபம். |
| துலாம் | சுவாரஸ்யம், சுகவாழ்வு, திடீர் பயணம், எடுத்த காரியம் கை கூடும். |
| விருச்சிகம் | காரிய இடையூறு, சொத்துப் பிணக்கு, பணக்குறைவு, உடல் நலக்குறைவு. |
| தனுசு | அற்பர் உறவு, கல்வியில் ஆர்வம், வீண் பயம், முயற்சி தாமதம். |
| மகரம் | இனிய அனுபவம், கூட்டு முயற்சி, பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை. |
| கும்பம் | உஷ்ண நிலை, கௌர்வக் குறைவு, தனவிரயம், காரிய தாமதம். |
| மீனம் | தெய்வ தரிசனம், ஆழ்ந்த சிந்தை, நல்லமுயற்சி, ஜன வசியம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 60 |
| தக்காளி | 50 | 60 |
| அவரை | 25 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 20 | 30 |
| கரட் | 50 | 60 |
| பூசணி | 20 | 30 |
| புடோல் | 20 | 20 |
| வாழைக்காய் | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 25 | 30-35 |
| பெரிய வெங்காயம் | 50 | 50 |
| பாகற்காய் | 40 | 30 |
| வெண்டிக்காய் | 20 | 40 |
| கரணைக் கிழங்கு | 25 | 40 |
| பயிற்றங்காய் | 30 | 40 |
| லீக்ஸ் | 120 | 130 |
| போஞ்சி | 15 | 20 |
| கீரை - 1 பிடி | 10 | 10 |
| தேசிக்காய் | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 20-30 |

# புலமையாளர்களைக் கௌரவிப்பதன் மூலம்

# சிறந்த படைப்புகள் உருவாக உந்துதல் அளிக்கிறோம்

## ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீட்டில் விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம்



(தொண்டைமானாறு)

அறிவின் முதிர்ச்சி நிலையில் நின்று இலக்கியங்களைப் படைப்போர் எளிய சொற்களைக் கையாண்டே அவற்றைப் படைப்பார். இதற்கு நாவலர் பெருமான் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். அதுபோலச் சமயச் சஞ்சிகையில் உள்ள ஆக்கங்களும் மக்களுக்கு விளங்கக் கூடிய எளிய மொழி நடையில் படைக்கப்பட வேண்டும். இவ்வாறு தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஞானச்சுடர் வெளியீடு, கட்டுரையாளர் கௌரவிப்பு நிகழ்வுகளின் போது உரை யாற்றிய யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம் தெரிவித்தார்.

சந்தியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர் புலமையாளர்களைக் கௌரவிப்பது மிகப் பெரும் பண்பு ஆகும்.

இப்பண்பை நாம் வளர்த்துக் கொள்வதால் எம்மன நிலையில் நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்கிறோம். கௌரவிக்கப் பெறுபவர்களிடம் இருந்து இன்னும் சிறந்த படைப்புக்கள் உருவாவதற்கு உந்துதல் வழங்குகிறோம்.

ஞானச்சுடர் சஞ்சிகை, பாலைக் கடைந்து நெய்யாக்கித் தருவது போல, இறை சார்ந்த செய்திகளை அழகாக, அடியவர் மனங்களில் பதியச் செய்யும் அருந் தொண்டைச் சிறப்பாக ஆற்றிவருகிறது. சமயச் சஞ்சிகை ஒன்றைக் கடந்த 12 வருடங்களுக்கும் மேலாக வெளிக்கொணரச் செய்வதென்பது இலகுவான காரியமல்ல. சந்நிதி வேலவர் தோன்றாத் துணையாக இருந்து இயக்குவதே இவ் வெற்றிக்கெல்லாம் காரணமாகும் என்றார்.

கௌரவிப்பு நிகழ்வை நெறிப்படுத்தி உரையாற்றிய ஆச்சிரம சுவாமி அமுத கலாஜோதி செ.மோகனதாஸ் அவர்கள், ஞானச்சுடர் வரலாற்றில் மூன்றாவது தடவையாகக் கட்டுரையாளர் கௌரவிப்பு இடம் பெறுகிறது எனவும் சிறந்த ஆக்கங்கள் படைக்கப்படுவதற்கு இச் சிறு ஊக்குவிப்பு வழி சமைக்கும் என்ற ஆர்வத்துடன் இந் நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இளைப்பாறிய ஆசிரியை புனிதவதி சண்முகலிங்கம் ஞானச்சுடர் மாசி மலருக்கான வெளியீட்டுரையை நல்கினார். ஞானச்சுடர் கட்டுரையாளர்கள் பொன்னாடைகள் போர்த்தப் பெற்று நினைவுக் கேடயங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (6)

## ஆங்கில மொழிக் கல்வியில் கலாநிதிப் பட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் இந்தியாவின் ஐதராபாத் நகரில் உள்ள ஆங்கில் மற்றும் வெளிநாட்டு மொழிகளுக்கான பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழிக் கல்விக்கான கலாநிதிப் பட்டத்தினை அண்மையில் பெற்றுள்ளார்.

இவர் வவுனியாவளாக ஆங்கில மொழிக் கற்பித்தல் அலகின் இணைப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

நாடகம், விமர்சனம், ஆங்கில இலக்கியம் என பல துறைகளில் நூல்களை எழுதியுள்ள இவர் வவுனியாவில் இருந்து வெளிவரும் 'மாருதம்' மற்றும் ஆங்கில இதழான 'ஒயாசிஸ்' ஆகியவற்றின் இணையாசிரியராகவும் கடமையாற்றுகிறார். (ந)






உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வில் சிறப்பு விருந்தினர் இரா. குலசிங்கம், பிரதம விருந்தினர் ஆர்.கஜரூபன் சிறப்பு விருந்தினர் எஸ்.எக்ஸ் குலநாயகம், அதிபர் மு.விக்னேஸ்வரன் ஆகியோர் மலர்மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ்.கொமர்ஷல் வங்கி உதவி முகாமையாளர், பாடசாலை அதிபரிடம் கணனித் தொகுதியொன்றை அன்பளிப்பாக வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:-கோப்பாய் நிருபர்)




## அடையாள அட்டை கண்டெடுப்பு

நீர்வேலி தெற்கு நீர்வேலி என்னும் முகவரியைச் சேர்ந்த ஞானேந்திரன் துஷ்யந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (900553277V) கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரத்தைக் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும். (6)



பண்டத்தரிப்பு யசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற கால்கோள் விழா நிகழ்வில் பாடசாலை அதிபர் அருட் சகோதரி அ.மேரியோசப்பின் நீற்றா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரைப் படத்தில் காணலாம்.


## பிறந்தநாள் நினைவுகள்



அமரர்
கதிர்காமத்தம்பி அருளானந்தன்
(B.A.Dip.in.Mass.Com, Dip in.Human Rights)
முன்னாள் ஆசிரியர் யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை, மூத்த பத்திரிகையாளர், நாடக ஆய்வாளர்.

ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டாலும்
மாண்டார் வரமாட்டார்
அப்பா உங்கள் நினைவுகள்
எம்மில் கலந்து விட்டனவே
அப்பாவாய் ஆசானாய் –நல்ல
கணவனாய் தோழனாய்
எத்தனை கதைகள்–எமக்கு
எவ்வளவு வழிகாட்டல்–அப்பா
கொடிய நோயின் கொடுமையை
பன்னிரு வருடமாய் தாங்கியே
துன்பத்திலும் துவழாதுதலை நிமிர்ந்து
மிடுக்கோடு வாழ்ந்தீர்கள்
கண்ணின் மணிபோல் காத்து வந்தோம்
குறையொன்றும்நாங்கள்
வைக்கவில்லையே
கதையொன்றும் எங்களுக்குகூறமுன்னே
கவர்ந்தானோகாலனவன்இன்னுயிரை
இதுதான்விதியோஅல்லது
விதிசெய்தசதியோ–அப்பா
இராப்பகலாய் எங்களுக்கு
பக்குவமாய் எடுத்துரைத்த பலவற்றையும்
நிச்சமாய் நிறைவேற்றுவோம்–என்றும்
பாதுகாவலனாக இருந்து–எம்மை
வழி நடத்துங்கள்அன்புத்தெய்வமே.

'முருக வாசா'
புலோலி மேற்கு,
பருத்தித்துறை,
T.P-021 226 4703

(இ) குடும்பத்தினர்


## சுகாதாரமற்ற முறையில் மீன் விற்பனை

(கோண்டாவில்)

கோண்டாவில் காரைக்கால், திருநெல்வேலி பாற்பண்ணை, உரும்பிராய் மூன்று கோவிலடி பகுதிகளில் சுகாதாரமற்ற முறையில் மீன் வியாபாரம் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்க மாற்று நடைமுறைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என வியாபாரிகளும் பொது மக்களும் கேட்டுக்கொள்கின்றனர். (ஓ-36)

## சுயதொழில் கொடுப்பனவு

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இரண்டாம் கட்ட சுயதொழில் நிவாரணக் கொடுப்பனவுக்காக 14 பேர் தெரிவுசெய்யப்படுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்டோர் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப பங்கீட்டு அட்டை என்பவற்றுடன் மார்ச் மாதம் 9 ஆம் திகதி தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஓ-29)

# இலங்கையில் தமிழர் 85

## ஹெல மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300-900

இவ் வர்த்தகத்தில் தமிழ்நாட்டு வணிகர்களும் படிப்படியாகக் கூடிய பங்கைப் பெற்றனர் என்று கூறலாம். ஐந்தாம் நூற்றாண்டின் பின்னர் பல்லவப் பேரரசு எழுச்சிபெறத் தொடங்கியதும், தமிழ்நாட்டின் கடல் கடந்த வர்த்தகம் செழிப்புற்றது.

ஆறாம் நூற்றாண்டிலிருந்து ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளாகத் தென் கிழக்காசிய வர்த்தகத்தில் தமிழ்நாட்டு வணிகர் முக்கிய பங்கெடுத்தனர். அவர்கள் செயல்களால் வர்த்தகம் வளர்ச்சியுற்றது மட்டுமன்றித் தென்கிழக்காசியாவிலும் இலங்கையிலும் பல்லவர் பண்பாட்டுக் கூறுகளும் பௌத்த சைவ சமயங்களின் செல்வாக்கும் பரவின.

ஆறாம் நூற்றாண்டிலிருந்து கவனிக்கக் கூடிய ஒரு விஷயமாக வணிக கணங்களின் வளர்ச்சி அமைகின்றது. பல்லவ அரசின் எழுச்சி கடல் கடந்த வர்த்தகத்துக்குத் துணையாக இருந்த சூழ்நிலையில் வணிக கணங்கள் தமிழ்நாட்டுத்துறைகளிலிருந்து இலங்கைக்கும் தென் கிழக்காசியாவுக்கும் கூடுதலாகச் செல்லும் அளவுக்கு வலுப்பெற்றன. இதனை வெளிப்படுத்தும் தொல்லியல் சான்றுகள் தமிழ்நாடு, இலங்கை மற்றும் தென்கிழக்காசிய நாடுகளாகிய தாய்லாந்து, வியட்நாம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.

இவ்விடங்களில் தென்னிந்திய வணிக கணங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் பௌத்த சங்கத்தார், பிரமாணர்கள் மற்றும் சிற்பிகள் ஆகியோரும் பங்குகொண்டனர். கிழக்குக் கலைத் துறைகள், குறிப்பாக நாகபட்டினமும் மாமல்லபுரமும், வங்காள விரிகுடாவுக்கு அப்பால் கிழக்கு இலங்கையின் துறைகளாகிய பல்லவவங்கம், திருகோணமலை ஆகிய துறைகளுடனும் தென் கிழக்காசியாவில் தாய்லாந்தின் தக்குவா-பா , வியட்நாமின் ஒக்இயோ ஆகிய துறைகளுடனும் வர்த்தக மார்க்கங்களால் தொடுக்கப்பட்டிருந்தன.

இந்த ஆர்வமூட்டும் வர்த்தக 'வரலாற்றைப் பற்றி விரிவாக அறிவதற்குப் பத்தாம் நூற்றாண்டு வரை ஆவணங்கள் கிடையாது போனமை கவலைக்குரிய விஷயமே. இக்காலகட்டத்தில் பெருமளவு இலக்கியப் படைப்புகள் தமிழ்நாட்டில் இருந்தபோதிலும், அவற்றில் இம்முக்கிய வர்த்தகம் பற்றிய தகவல்களைப் பெறுவது அரிது. இதற்கு விதிவிலக்காக, மணிமேகலையில் சாவகம் (இந்துனீசியா) நோக்கிப் புறப்பட்ட கப்பல்கள் பற்றிய குறிப்பு ஒன்று உண்டு. தென்னிந்திய வணிகர்கள் எவ்வாறு கணங்களாக இயங்கினர்? வங்காள விரிகுடாவைத் தாண்டி அடிக்கடி தென்கிழக்கு ஆசியா சென்று வர எத்தகைய கப்பல்கள் பயன்பட்டன? எடுத்துச் செல்லப்பட்ட வர்த்தகப் பொருட்கள் யாவை? இவை எவ்வாறு பொதிசெய்யப்பட்டு ஏற்றுதி இறக்குமதி செய்யப்பட்டன? சென்ற இடங்களில் தமிழ்நாட்டுக் கணங்கள் எவ்வாறு இயங்கின? இவை போன்ற அடிப்படை வினாக்களுக்கு விடை காண முடியாத நிலையில் இவ் வர்த்தகம் பற்றிய அறியாமை நிலவுகின்றது. இலக்கிய சான்றுகள் மட்டுமன்றி கல்வெட்டுச் சான்றுகள் கூட 900க்கு முன் அரிதாகவே கிடைக்கின்றன. அஞ்சு வண்ணம் மற்றும் மணிக்கிராமம் போன்ற வணிக கணங்கள் பற்றிக்கூறும் கல்வெட்டுக்கள் ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் கிடைக்கவில்லை.

மிகப் பழைய தென்னிந்திய வணிக கணங்களுள் ஒன்று மணிக்கிராமம். இந்த வணிக் கணத்தைப் பற்றி ஆவணங்கள் ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாய் தென்னிந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. பத்தாம் நூற்றாண்டில் இலங்கையில் உள்ளூர்ப் பகுதியாகிய மஹியங்கனைக்கு அருகாமையில் ஹோபிடிகம என்ற இடத்தில் மணிக்கிராமத்தவர் வர்த்தகம் நடத்தினர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுண்டு. இப்படியான உள்ளூர் வர்த்தக மையம் ஒன்றில் தம் முயற்சிகளில் ஈடுபட்ட மணிக்கிராமத்தவர் முதலில் கரையோர மையங்களாகிய திருகோணமலை, மாதோட்டம் போன்ற இடங்களில் தங்கள் நிலையங்களை நிறுவியிருப்பர் எனலாம்.

ஒன்பதாம் நூற்றாண்டில் மணிக்கிராமத்தவர் தாய்லாந்தின் தக்குவாபா என்னும் துறையில் பல வகைப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு அவ்விடத்தில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டு ஒன்று சான்று பகருகின்றது. இதே நூற்றாண்டில் இவ் வணிக கணத்தினர், கேரளக் கரையோரத்திலும் பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து வர்த்தகம் நடத்திய பிற வணிக கணங்கள் மற்றும் வர்த்தகக் குழுவினர் ஆகியோருள் நான்கு நாட்டார் என்ற கணத்தைச் சேர்ந்தோரும் செட்டிகளும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனுராதபுரத்தில் சில சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியமுடிகின்றது. நான்கு நாட்டார் பௌத்த பள்ளி ஒன்றுக்கு ஆதரவு வழங்கியவர்களாகவும், செட்டிகள் சைவக்கோயில் ஒன்றுக்கு வழங்கப்பட்ட பணத்தை வைப்பாகப் பெற்றிருந்ததையும் இவற்றால் அறியலாம்.

தென்னிந்திய வணிக கணத்தினர் ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே சமய நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குவோராகவும் பிராமணர்களையும் பௌத்த சங்கத்தாரையும் தென்னிந்தியாவுக்கு வெளியே கொண்டு செல்ல உதவுவோராகவும், சிற்பக் கட்டட வேலைப்பாடுகளை அமைப்பதற்கு சமய நிறுவனங்களுக்கு உதவுவோராகவும் செயலாற்றினர் என்பதை மறைமுகமான சான்று கொண்டு அறியலாம். இச் சான்று கல்வெட்டுக்கள், சிற்பங்கள் மற்றும் கட்டட அழிபாடுகள் ஆகியவற்றின் வடிவத்தில் இலங்கையிலும் தென் கிழக்காசியாவிலும் கிடக்கின்றது. பிற்பட்ட காலத்தில் கொழும்பு, கோலாலம்பூர் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இடங்களில் இந்துக் கோயில்கள் அமைப்பதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் தமிழ்நாட்டிலிருந்து சென்ற செட்டி சமூகத்தினரும் பிற வணிகர்களும் உதவியது போன்றதே முன்னர் வணிகக் கணங்கள் எடுத்த முயற்சிகள் எனலாம். (தொடரும்)

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

**4**

**1968** மார்ட்டின் லூதர் கிங் படுகொலை செய்யப்பட்டமை குடியுரிமைப் போராட்டத்திற்கு பேரிழப்பாகும். இது அமெரிக்க சமுதாயம் எவ்வளவு பிளவுபட்டுள்ளது என்பதையும் எல்லா மனிதர்களும் சமமாகவே பிறக்கிறார்கள் என்ற சுதந்திரப் பிரகடனத்திலிருந்து அமெரிக்க மக்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்டியது.

**1971** கப்டன் சாமுவல் யு.எஸ்.கப்பல் படையின் முதலாவது கறுப்பினத் தலைவரானார். வியட்னாம் யுத்தத்தில் கறுப்பின இளைஞர்கள் விகிதாசாரத்தை விஞ்சியளவு தியாகம் எதிர்காலத்தில் அவர்களுக்கு முன்னேற்றத்திற்கான பல வாய்ப்புக்களை தந்தது.

**1989** ஜெனரல் கொலின் பவல் யு.எஸ் கூட்டுப்படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்டார். இது இராணுவத்தின் அதி உயர்ந்த பதவியாகும்.

**1992** றொட்னி கிங் என்ற கறுப்பரை லொஸ் ஏன்ஜல்ஸ் பொலிஸார் நடுத் தெருவில் வைத்து அடித்து உதைத்தார்கள்.

இச் சம்பவம் வீடியோ செய்யப்பட்டு உலகம் முழுவதும் தொலைக்காட்சிகள் மூலம் ஒளி பரப்பப்பட்டது.

பொலிஸாருக்கு எதிராக வழக்குப் பதிவாகியது. நீதிமன்றத்தில் ஜுரர்கள் பொலிஸார் மீது எந்தக் குற்றமும் காணாது வழக்கை தள்ளுபடி செய்தனர். இதையடுத்து லொஸ் ஏன்ஜலில் இனக்கலவரம் வெடித்தது.

தீர்ப்பு பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி 50பேர் கொல்லப்படவும் 8000 பேர் கைது செய்யப்படவும் வழிவகுத்தது. கிங் தொலைக்காட்சியில், மன்றாடினார். "மக்களே நான் இதைத்தான் சொல்ல விரும்புகிறேன் நாங்கள் தொடர்ந்தும் ஒன்றாக வாழமுடியுமா? உங்களுக்குத் தெரியும். சொல்லுங்கள்" என்று.

**2000** அதிபராகத் தெரிவுசெய்யப்பட்ட ஜோர்ஜ் புஷ் பல ஆபிரிக்க-அமெரிக்கர்களை தனது புதிய மந்திரிசபையில் நியமித்துள்ள செய்தியை அறிவித்தார்.

கொலின்பவலை அரசாங்க செயலராகவும் கொண்டலீசா ரைஸை வெளியுறவு ஆலோசகராகவும் டாக்டர் றொட்றிக் பேய்ஜை கல்வி அமைச்சராகவும் நியமித்தார்.



தந்தையுடன் ஒபாமா

**2008** பராக் ஒபாமா முதலாவது கறுப்பினத்தைச் சேர்ந்த அமெரிக்க ஜனாதிபதியாகி வரலாறு படைக்கிறார். அவரின் தாரக மந்திரமாக "*ஆம் (மாற்றம்) எம்மால் முடியும்*" இது இன நிற வேறுபாடின்றி பல நாட்டு மக்களால் உச்சரிக்கப்படுமளவிற்கு பரவியது.

இரண்டு சொல் மந்திரத்தின் மூலம் அவர் அமெரிக்கர்களை மாத்திரமன்றி உலகம் முழுவதையும் வெற்றிகொண்டார்.

ஆபிரிக்காவில் உள்ள கென்யா நாட்டில் ஆடு மேய்ப்பானுக்கும் அமெரிக்க வெள்ளைக்கார பெண்ணுக்கும் மகனாகப் பிறந்த ஒபாமா உலகின் மிக்க வல்லமை படைத்த மனிதனாக உருவெடுத்தபோது அவர் கூறிய இரண்டு சொல் மந்திரம் தான் "*மாற்றம் வந்துவிட்டது*" 47 வயதான இளைஞன் அவர். அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது ஆபிரிக்க-அமெரிக்கர்.

அவர் தம் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி ஒளிமயமான எதிர்காலமொன்றின் விடிவுக்கு கட்டியம் கூறுவதாக உலகமெங்கும் ஆவலோடு வரவேற்கப்பட்டது.

இவ் வெற்றியானது அமெரிக்க வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயமான இனவாதப் பிளவை மூடி பாலமமைத்துள்ளது. மேலும் புஷ் ஜனாதிபதியாக இருந்த காலங்களில் இரு போர்கள் மூலம் அமெரிக்காவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டது.

தொடர்ந்து வந்துள்ள பொருளாதார சீரழிவால் கலங்கிய மக்களுக்கு மீளவும் நாட்டைக் கட்டியெழுப்பவும் அரிய சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

தங்கள் வாக்குகளை தவறாது பதிவு செய்யத் திரண்ட மக்கள் கூட்டம் என்றுமில்லாதவாறு 14 கோடியைத் தாண்டியது. இது மேலும் ஒரு சாதனை.

கறுப்பின வாக்காளர் கள் மட்டுமன்றி எல்லா இனத்தைச் சேர்ந்த இளைஞர்களும் மிகப் பெரிய ஆதரவை வழங்கினர். வெள்ளை இனவாக்காளர்களில் 43 சதவீதத்தினர் 47 வயதான செனேற்றர் ஒபாமாவுக்கு வாக்களித்தனர்.

45 ஆண்டுகளுக்கு முன்பு மார்ட்டின் லூதர் கிங் ஆற்றிய "*நான் காணும் கனவு*" என்ற பேருரைக்கு இணையாக ஒபாமா சக்தி வாய்ந்த வெற்றிப் பேருரை ஒன்றை ஆற்றினார். அதில் இவ்வாறு சவால் விடுத்தார்.

உங்களில் இன்னும் யாருக்காவது "*அமெரிக்காவில் எதுவும் நிகழலாம்*" என்பதில் சந்தேகம் இருக்குமாயின், எம் முன்னோர்கள் கண்ட கனவுகளை எம்மவர் இன்னும் நினைவில் கொண்டுள்ளனரா என்று ஏங்குபவர்கள் இருப்பார்களாயின், எங்கள் ஜனநாயகத்தின் ஆற்றலை இட்டு இன்னும் கேள்வி எழுப்புபவர்கள் இருப்பார்களாயின், இன்றைய இந்த இரவு தான் உங்களுக்குரிய விடையாகும்.

**ஜம்பொன்**

ஜனநாயகக் கட்சி வேட்பாளராக போட்டியிட்டு அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒபாமா அவர்கள் தனது நாட்டை புரட்சிகரமான மாற்றங்களுக்குட்படுத்துவதில் விரைந்து செயற்படத் தொடங்கினார்.

தன் முன் பெரும் சவாலாக நிற்கும் பல பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றிற்கு முகம் கொடுக்கத் தயாரானார். (தொடரும்)

# அடுத்த ஒன்றரை வருடத்தில் ஈராக்கிலிருந்து அமெரிக்க படைகள் முற்றிலும் வாபஸ் பெறப்படும்

## ஒபாமா திட்டவட்ட அறிவிப்பு

(கேம்ப்லெஜீனே)

ஈராக்கில் இருந்து அடுத்த ஒன்றரை வருடத்தில் அமெரிக்க படைகள் திரும்பப் பெறப்படும் என்று ஜனாதிபதி ஒபாமா திட்டவட்டமாக அறிவித்து இருக்கிறார்.

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை வைத்திருப்பதாக கூறி ஈராக் மீது அமெரிக்கா படைஎடுத்தது.அங்கு அதிபர் சதாம் உசேனின் ஆட்சியைக் கவிழ்த்ததோடுஅவரை ஈராக் நீதிமன்றத்தில் நிறுத்தி தூக்கிலிடவும் செய்தது.

கடந்த 6ஆண்டுகளாக ஒரு இலட்சத்து 42 ஆயிரம் அமெரிக்கப்படையினர் ஈராக்கில் தங்கி உள்ளனர்.இவர்கள் அனை வரும் ஜனாதிபதி புஷ் இருந்துபோது அனுப்பி வைக்கப்பட்ட வர்கள்ஆவர்.

அமெரிக்க படையினர் பெருமளவில் ஈராக்கில் குவிக்கப்பட்டிருந்தாலும் அந்த நாட்டில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை. சதாம் உசேன் ஆதரவு தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்திஅமெரிக்க இராணுவத்தினருக்கு சேதத்தை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்ததாக்குதல்களில் இதுவரை 4ஆயிரத்துக்கும் மேலான அமெரிக்கபடையினர் பலியாகிவிட்டார்கள்.மேலும் ஈராக்கில் உள்ள தனது படைகளைப் பராமரிப்பதற்கென்றே ஒவ்வொரு ஆண்டும் பல ஆயிரக் கணக்கான கோடி ரூபாய்களை அமெரிக்கா செலவிட்டு வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த ஒபாமா தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஈராக்கின் மீதான அமெரிக்க நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அங்கு குவிக்கப்பட்டிருக்கும் தனதுநாட்டு படைகள் வாபஸ்பெறப்படும் என்று ஒபாமாஅறவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வடக்குக் கரோலினாவில் உள்ள கேம்ப் லெஜீனேஅமெரிக்க கடற்படை முகாமில் வீரர்களுக்கு மத்தியில் ஜனாதிபதி ஒபாமா இதை மீண்டும் உறுதிப் படுத்தினார். அவர் பேசும் போது கூறியதாவது,

ஈராக்கை அந் நாட்டு மக்களிடமே விட்டு விட்டுநாங்கள்வெளியேறுவோம்இந்த போரை நிறுத்துவதற்கான பணிகளைத் தொடங்குவோம்.

அமெரிக்க படைகளைத் திரும்ப பெறுவதற்கான காலத்தைநிர்ணயித்து இருக்கிறேன்.அங்கு சண்டையில் ஈடுபடுத்தப்பட்டு வரும் அமெரிக்கப்படையினர் அடுத்த 18 மாதங்களில் அங்கிருந்து நாடு திரும்புவார்கள்இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் திகதிக்குள்இவர்கள் ஈராக்கில் இருந்து அமெரிக்கா திரும்பி விடுவார்கள்.

எனினும் ஈராக்கில் 35 முதல்50 ஆயிரம் வரையிலான அமெரிக்க படை யினர் தங்கியிருந்து ஈராக்கிய படைகளுக்கு தீவிரவாதத்துக்கு எதிரான போர்பயிற்சியை அளிப்பதிலும் புனரமைப்பு பணிகளிலும் தீவிரவாதத் தைக் கட்டுப்படுத்துவதற்குரிய



ஓரளவு நட வடிக்கை களிலும் ஈடுபடுவார்கள்.

இவர்களையும் கூட, கடந்த ஆண்டு ஈராக்குடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி 2011 ஆம் ஆண்டுக்குள் திரும்ப அழைத்துக் கொள்ளவேண்டும் என்பது தான் எங்கள் நோக்கம். ஈராக்கின் எல்லையையோ, வளங்களையோ அமெரிக்கா ஒரு போதும் எடுத்துக்கொள்ளாது. இனிமேல் தங்ளை பாதுகாத்து கொள்ள வேண்டிய பொறுப்பு ஈராக்கியர்களுடையது தான்.

தீவிரவாதத்துக்கு எதிரான போரினால் இடம்பெயர்ந்த மக்களை அதே பகுதியில் குடியமர்த்தவும், ஈராக்கிய அரசியல் வாதிகளின் பிரிவினைவாத போக்கினை நீக்குவதற்கும் உதவும் வகையில் அமெரிக்காவின் மண்டலக் கொள்கைகள் அமையும். ஈரான், சிரியா நாடுகளுக்கான அமெரிக்க நிலைப் பாடும் இதுவே என்றார்.

ஈராக்கிலிருந்து முற்றிலுமாக அமெரிக் கப் படைகள் திரும்பப் பெறப்படும் என்று ஒபாமா அறிவித்தபோது முகாமில் கூடியி ருந்த கடற்படை வீரார்கள் அனைவரும் உற்சாக மிகுதியில் கைதட்டி ஆரவாரம் செய்தனா். (6)

## அணுசக்தியில் இயங்கும் விமானம் தாங்கி கப்பலை தயாரிக்க ரஷ்யா முடிவு

(மொஸ்கோ)

அணுசக்தியில் இயங்கும் விமானம் தாங்கி போர்க்கப்பலை தயாரிக்க ரஷ்யா் முடிவு செய்திருக்கிறது.

இது குறித்து, ரஷ்யாவின் ஒருங்கிணைந்த கப்பல் கட்டுமான கழகத் தலைமை அதிகாரியும், கப்பற்படை அதிகாரியுமான அனடோலி செலமோவ் கூறுகையில், 'அணு சக்தியில் இயங்கும் புதிய தலை முறைக்கான ஆயுதம் தாங்கும் கப்பலை கட்டுவதற்கான அனைத்து ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளன. இதற்கான காலக்கெடு எதையும் நிர்ணயிக்க வில்லை. பணிகளுக்கான ஒப்பந்தம் ஏற்பட்வுடன் கட்டமைப்பு பணிகள் தொடங்கும்' என்று தெரிவித்தார். (6)

## ருவாண்டாவில் இனப்படுகொலை; பாதிரியாருக்கு 25 ஆண்டு சிறை

(கிகாலி)

1993 ஆம் ஆண்டு ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் நடந்த இனப்படுகொலையில் 100 நாட்களில் 8 இலட்சத்து க்கும் அதிக மான துத்சி இன மக்கள் கொல்லப் பட்டனர். அப்போது இராணுவ ஆதரவு பாதிரியாராக இருந்த இமானுவல் ருகுண் டோ என்பவரிடம் அடைக்கலம் தருவதற்கு பதிலாக அவர்களை கடத்துவதற்கு ருகுண் டோ உதவியதோடு ஒரு பெண்ணை பாலியல் பலாத்காரமும் செய்ய முயற்சித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கை ஐ.நா.சபையின் போர் குற்றங்களுக்கான சர்வதேச நீதிமன்ம் விசாரித்து வந்தது. நேற்று முன்தினம் இந்த நீதிமன்றம் கடுமையான குற்றங்களில் ஈடுபட்ட பாதிரியார் ருகுண் டோ விற்கு 25 வருட சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு கூறியது. (6)

# பங்களாதேஷில் பிணக் குவியல்கள் மேலும் 3 இடங்களில் கண்டுபிடிப்பு

## மக்களிடையே பெரும் பீதி



(டாக்கா)

பங்களாதேஷ் துணை இராணுவப் படை தலைமையகத்தில் மேலும் மூன்று இடங்களில் இராணுவ அதிகாரிகளின் உடல்கள் புதைக்கப்பட்டு இருப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. எல்லை பாதுகாப்புப் படை தலைவர் ஷகீல் அகமதுவின் மனைவியின் உடலும் கண்டுபிடிக்கப்பட்டது.

பங்களாதேஷத்தில் துணைஇராணுவப் படை தலைமையகத்தில் வீரர்கள் நடத்திய கலவரம் ஒய்ந்துள்ளதை அடுத்து அங்கு தீவிர தேடுதல் வேட்டையில் இராணுவமும் பொலிஸாரும் ஈடுபட்டனர்.

ஏற்கனவே துணை இராணுவப் படை அதிகாரிகள் பலரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் தேடும் பணி நடந்தது. இதில் மேலும் மூன்று இடங்களில் இராணுவ அதிகாரிகளின் உடல்கள் புதைக்கப்பட்டு இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. குண்டு துளைத்த நிலையில் 10 உடல்கள் மீட்கப்பட்டன.

இதில் எல்லை பாதுகாப்புபடை தலைவர் ஷகீல் அகமதுவின் மனைவி நஜ்னீன் உடலும் இருந்தது. ஏற்கனவே நடந்த சண்டையில் ஷகீல் அகமது கொல்லப்பட்டு விட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. துணை இராணுவப் படை தலைமை யகத்தில் தொடர்ந்து பிணக் குவியல்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. அந்நாட்டு மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது. (6)

# பாகிஸ்தானில் புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றுவதற்கு தலிபான்கள் முயற்சி

## உளவுத் துறை தகவல்

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படையால் விரட்டியடிக்கப்பட்ட தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்தனர். அங்குள்ள பழங்குடி மக்களை தங்கள் ஆதரவாளர்களாக மாற்றிய அவர்கள் இப்போது பாகிஸ்தானில் ஒரு பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர்.

அங்குள்ள வட மேற்கு பகுதி மற்றும் சுவாத் பள்ளத்தாக்கு ஆகியவை அவர்கள் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. மற்ற பகுதிகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.இந்த நிலையில் தலிபான்கள் பாகிஸ்தானில் சர்தாரி ஆட்சியை புரட்சி மூலம் கவிழ்த்து விட்டு ஆட்சியை கைப்பற்ற முயற்சித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்தாரிக்கும் முன்னாள் பிரதமர் ஷெரீப்புக்கும் இடையே தற்போது கடும் மோதல் நடந்து வருகிறது. இதனால் அதிபர் சர்தாரி மற்ற விஷயங்களில் கவனம் செலுத்த முடியாமல் அரசியல் விவகாரத்தில் சிக்கி தவிக்கிறார். இந்த சந்தர்ப்பத்தை சாதக மாக பயன்படுத்தி தலிபான்கள் சர்தாரி அரசை கவிழ்க்க முயற்சித்து வருகின்றனர்.

பாகிஸ்தான் தலிபான்களிடம் சென்றால் அது இந்தியாவுக்கு பெரிய அச்சுறுத்தலாக இருக்கும். பாகிஸ்தானிடம் அணுகுண்டுகள் இருக்கின்றன. அதை வைத்து தலிபான்கள் இந்தியாவை மட்டும் அல்ல அமெரிக்கா உட்பட பல நாடுகளையும் மிரட்டும் நிலையும் ஏற்படலாம்.

இதற்கிடையே பாகிஸ்தானில் பொருளாதாரா தலைநகரும் துறைமுக நகருமான கராச்சியைக் கைப்பற்ற தலிபான்கள் திட்டமிட்டிருப்பதாக கராச்சி சி.ஐ.டி. பொலிஸ் துறை சிந்துமாகாண அரசிடம் அறிக்கை கொடுத்துள்ளது.அதில் தலிபான்கள் ஏற்கனவே கராச்சி நகரை கைப்பற்றும் முயற்சியில் இறங்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. (6)

# அமெரிக்கப் படையினர் கடமைகளை கையளிக்கும் போது பொறுப்பேற்க தயார்

## ஈராக் பிரதமர் தெரிவிப்பு

(லண்டன்)

ஈராக்கில் தற்போது செயற்பட்டுவரும் அமெரிக்கப் படையினர் அடுத்த ஆண்டில் தமது போர்க் கடமைகளை முடிக்கும் போது ஈராக்கிய பாதுகாப்புப் படையினர் அந்தக் கடமைகளை கையேற்க தயாராக இருப்பார்கள் என்று ஈராக்கிய பிரதமர் நூரி அல் மலிக்கி தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் பாதுகாப்பை இனி ஈராக்கே பொறுப்பேற்பது என்பதில் தாம் உறுதியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஈராக்கின் துணை அதிபரும், சுனி இனத்தவருமான தாரிக் அல் ஹஸ்மியும், ஷியா பிரிவுகள் சிலவும் அமெரிக்கப் படைகளின் வெளியேற்றத்தை வரவேற்றுள்ளனர்.

ஈராக்குக்கு ஆதரவாகவும், படைகளுக்கு பயிற்சி வழங்குவதற்காகவும் அமெரிக்கப் படையினர் ஐம்பதினாயிரம் பேர் அங்கு தொடர்ந்து தங்கியிருப்பார்கள் என்ற தகவலை ஷியா இன மதகுருவான மொக்தடா அல் சதருக்கு ஆதரவான குழுவினர் கண்டித்துள்ளனர். (6)

# பங்களாதேஷ் இராணுவ புரட்சிக்கு பாகிஸ்தானின் சதியே காரணம்

## பரபரப்பு தகவல்

பங்களாதேஷ் எல்லை பாதுகாப்பு படையினர் திடீர் புரட்சியில் ஈடுபட்டனர். தலைமை அலுவலகத்தில் நடந்த சண்டையில் ஏராளமான அதிகாரிகளையும் அவர்களது குடும்பத்தினரையும் சுட்டுக்கொன்றனர். 200 பேர் வரை பலியாகியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புரட்சியில் ஈடுபட்ட அத்தனை பேரும் ஆயுதங்களை கீழே போட்டு சரண் அடைந்துவிட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த பங்களதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உத்தரவிட்டார். அதிகாரிகள் குழு விசாரணை நடத்தியது. இதில் எல்லை பாதுகாப்புப் படையினர் திட்டமிட்டு புரட்சிசெய்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதன் பின்னணியில் சலாலுதீன் சவுத்திரி என்ற தொழில் அதிபர் இருந்ததும் தெரியவந்தது. சிட்டாகாங் நகரை சேர்ந்த இந்த தொழில் அதிபர் கப்பல் நிறுவனம் நடத்தி வருகிறார்.

இவருக்கும் பாகிஸ்தானுடன் நெருங்கிய தொடர் உண்டு. பாகிஸ்தான உளவுப் படையுடனும் தொடர்பு வைத்திருந்தார். பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் காலீதா ஜியாவுக்கு நெருக்க மானவர். எனவே சலாலுதீன் சவுத்ரி பாகிஸ்தான் மற்றும் காலீதா ஜியாவின் தூண்டுதலால் இந்த சதித் திட்டத்தை நிறைவேற்றி இருப்பதாக தெரியவந்துள்ளது.

எல்லைப் பாதுகாப்புப் படையினர் மூலம் பிரதமர் ஷேக் ஹசீனாவை கொன்று விட்டு ஆட்சியை கைப்பற்ற அவர் திட்டமிட்டிருந்தது தெரிய வந்தது. எனவே இது தொடர்பான முழுமையான விசாரணை நடந்து வருகிறது. (6)

# வன்னிப்பகுதி மீதான விமான, எறிகணைத் தாக்குதல்களை இலங்கை அரசு நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பிரி.லிபரல் ஜனநாயகக் கட்சி தலைவரிடம் மகஜர் கையளிப்பு



வன்னிப் பகுதி மீதான விமான மற்றும் எறிகணைத் தாக்குதல்களை இலங்கை அரசு உடன் நிறுத்த வேண்டும். ஐ.நா.வின் மனித உரிமை கண்காணிப்பகம் இலங்கையில் நிறுவப்பட வேண்டும்.சர்வதேச தொண்டு நிறுவனங்களை வன்னிக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் உட்பட பல கோரிக்கைகள் அடங்கிய மகஜரை டென்மார்க் சமூக லிபரல் கட்சி தலைவர் சிமோன் கியூஸிடம் கையளித்துள்ளார்.

பிரித்தானிய லிபரல் ஜனநாயகக் கட்சி தலைவர் சிமோன்கியூஸும் டென்மார்க் சமூக லிபரல் கட்சி பிரமுகர் தர்மகுலசிங்கமும் கடந்த 24 ஆம் திகதி பிரித்தானிய நாடாளுமன்ற வளாகத்தில் சந்தித்து தற்போதைய தாயக அவலநிலை பற்றியும் ஈழத்தின் பால் பிரித்தானியஅரசின் நிலைப்பாடு பற்றியும் கலந்துரையாடிய பின் கையளிக்கப்பட்டுள்ளது.அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னி பெருநிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் நோக்கில் இலங்கைப்படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டுள்ள இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் காரணமாக இன்று நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர்.

தமிழின அழிப்பின் ஒரு அங்கமாக விமானத் தாக்குதல்களையும் பீரங்கித்தாக்குதல்களையும் மற்றும் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களையும் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வாழும் பகுதிகளில் படையினர் மேற்கொண்டுவருகின்றனர்.

- தமிழ் இன அழிப்பை நோக்காகக் கொண்டு அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்களை நாம் வன்மையாக கண்டிப்பதோடு வன்னிப்பகுதி மீதான விமான மற்றும் எறிகணைத் தாக்குதல்களை இலங்கை அரசு உடன் நிறுத்த வேண்டும்.
- ஐ.நா.வின் மனித உரிமை கண்காணிப்பகம் இலங்கையில் நிறுவப்பட வேண்டும்.
- சர்வதேச தொண்டு நிறுவனங்களை வன்னிக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும்.
- இந்தியா உடனடியாக இலங்கையிலிருந்து தன் படையினரை திரும்பப் பெற்றுக் கொள்வதோடு மேற்கொண்டு செயற்கைக் கோள் உதவிகள், ராடர் போன்ற உதவிகளை நிறுத்த வேண்டும்.இதனை டென்மார்க உட்பட ஐரோப்பிய ஒன்றியமும் கண்டிக்க வேண்டும்.
- உடனடியாக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி அதைத் தொடர்ந்து நின்று போன அரசியல் பேச்சுவார்த்தையினை ஆரம்பிக்க வேண்டும்.
- தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

டென்மார்க் வாழ் தமிழ் மக்களின் கோரிக்கையாக், டென்மார்க் நாடாளுமன்றிடமும் ஐரோப்பிய நாடாளுமன்றிடமும் பிரித்தானிய நாடாளுமன்றிடமும் ஐ.நா சபையிடமும் இம் மனுவினூடு நீதியைக் கேட்டுக் கொள்கின்றேன் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# கம்பஹாவில் தேடுதல்; 13 பேர் கைது

(கொழும்பு)

கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஆறுமணி முதல் மாலை வரை பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிரேஸ்ட பொ லிஸ் அத்தியட்சரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

ஆளடையாளங்களை உறுதிபடுத்துவதற்கான உரிய ஆவணங்கள் இல்லாதவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இத் தேடுதலின் போது ஏழாயிரத்து 485 பொது மக்களும் ஆயிரத்து 144 வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (6)

# வித்தியாதரன் கைது செய்யப்பட்ட விதம் பொலிஸாரின் முறையற்ற செயற்பாட்டுக்கு உதாரணம்

## காணாமல் போனோரை தேடியறியும் குழு கண்டனம்

சுடர்ஒளி பத்திரிகை ஆசிரியர் வித்தியாதரன் கைதுசெய்யப்பட்ட விதம் பொலிஸாரின் முறையற்ற செயற்பாட்டுக்கு உதாரணமாக அமைந்துள்ளது என காணாமற் போனோரை தேடியறியும் குழுவிடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உரிய நேரத்தில் வித்தியாதரனின் உதவியாளர்களும், மக்களும் செயற்பட்டதால் அவர்மீது மேற் கொள்ளப்பட்ட அநீதியான செயற்பாடு வெளிச்சத்திற்கு வந்தது.

இத்தகைய நிலைமைகள் மேலும் ஏற்படாமல் இருப்பதற்கு பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதுடன், இது தொடர்பாக பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சுடர் ஒளி பத்திரிகை ஆசிரியர் கைது சம்பந்தமாக காணாமற் போனோரை தேடியறியும் குழு வன்மையாக கண்டிக்கிறது. (6)

# வன்னியில் செத்தல் மிளகாய் கிலோ 3000 ரூபாவுக்கு விற்பனை

(கொழும்பு)

வன்னியில் ஒரு கிலோ செத்தல் மிளகாய் மூவாயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீன்கிலோ ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப் படும் அதேவேளை எந்த ஒரு மரக்கறியும் கிலோ ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு அதிகமாகவே விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எந்த ரகத்தைச்சேர்ந்த அரிசியும் கிலோ முந்நூறு ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது.

தீப்பெட்டி,பனடோல்,கொத்தமல்லி , கடுகு, சீரகம், மிளகு போன்றவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மண்ணெண்ணெய்யை பார்ப்பதே அரிதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. (6)

# இலங்கையில் யுத்த சூழ்நிலை காரணமாக எச்.ஐ.வி, எய்ட்ஸ் ஆபத்து அதிகம்

## உலக வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எச்.ஐ.வி.,எய்ட்ஸ் நோய் பரவல் குறைவாக இருப்பினும் பல்வேறு காரணங்களால் குறிப்பாக யுத்த சூழ்நிலை காரணமாக எச்.ஐ.வி., எயிட்ஸினால் பாதிக்கப்படும் ஆபத்து அதிகமாகவுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

'தெற்காசியாவில் எச்.ஐ.வி.மற்றும் எய்ட்ஸ் ஒரு பொருளாதார அபிவிருத்தி அச்சுறுத்தல்' எனும் தலைப்பில் உலக வங்கி கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை குறைந்த பரவல் கொண்ட நாடென குறிப்பிடப்பட்டுள்ள அவ்வறிக்கையில் தற்போதைய பிரச்சினை பாரியளவிலான இராணுவப் பரம்பல். உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்த மக்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்புக் காரணமாக வாழ்க்கைத் துணையை பிரிந்திருத்தல் போன்ற காரணங்களால் உயிர் அச்சுறுத்தலை எதிர்கொள்ள வைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளில் எய்ட்ஸ் மற்றும் எச்.ஐ.வி. தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படாவிட்டால் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திகளுக்கு எய்ட்ஸ் எச்.ஐ.வி ஆகியன பாரிய அச்சுறுத்தலாக அமையும் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயங்களில் விஸ்தரிப்பு, வாலிபப் பருவத்தினர் கிராமப் புறங்களிலிருந்து பெரிய நகரங்களுக்கு குடிபெயர்தல் போன்ற பாரிய சமூக மாற்றங்கள் ஆகிய விடயங்களும் அவர்களைஎச்.ஐ.வி.யைஎதிர் நோக்கும் சாத்தியத்தை அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக எச்.ஐ.வி. பரவல் வீதம் மிகக்குறைவாக (0.5சத வீதம் )இருப்பின் பாலியல் தொழிலாளர்கள், அவர்களின் வாடிக்கையாளர்கள், ஊசிமூலம் போதை மருந்தேற்றிக் கொள்பவர்கள், அவர்களின் வாழ்க்கைத் துணைகள் போன்றவர்கள் அதிகளவில் எச்.ஐ.வி தொற்றலுக்குள்ளாகும் அபாயத்தை எதிர்கொள்கின்றனர்.

தெற்காசியாவில்1.5 சதவீதமான உயிரிழப்புகளுக்கு எய்ட்ஸ்காரணமாக உள் ளது. இந்தியாவில்இது 2சத வீதமாக உள்ளது. தெற்காசியாவில் இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளில் சுகாதார செலவீனங்கள் நான்கில் மூனறு பங்கு தனிப்பட்ட ரீதியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. குறைந்தளவிலான செலவீனங்களே காப்புறுதி நிறுவனங்கள் போன்ற மூன்றாம் தரப்பினால் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)


யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரிக்கும் பணிப்பாளருக்கும் பொன்விழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்



யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியும், யாழ் தொழில்நுட்பக்கல்லூரி அதிபரும் மாகாணப்பணிப்பாளரும் ஆகிய கலாநிதி ந.யோகராஜன் அவர்களும் இன்று பொன்விழா ஆண்டை நிறைவு செய்கின்றனர்.
தொழில்நுட்பக் கல்லூரி வளர்ச்சிக்கு அவர் ஆற்றியசேவையை கௌரவித்து அமெரிக்கப் பல்கலைக்கழகம் (TRINTY COLLEGE UNIVERSITY) பேராசிரியர் பட்டம் வழங்கியமைக்கு உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| S.தயாநாதன் | மணிமாறன் | M.மதிவர்ணன் |
| K.சாந்தகுமார் | தலைவர் | A.சந்திரகுமார் |
| சிக்கன கூட்டுறவுச் சங்கம் | பட்டதாரிகள் சங்கம் | ஊழியர் சங்கம் |

(C/2162)

# இந்தியாவில் ஆயுர்வேதக் கல்வி கற்பது எப்படி?



மனித உடலில் மூன்றுவித சக்தி மையங்கள் உள்ளன. வாதம் , பித்தம், கபம் எனப்படும். இவை முறையே நரம்பு சக்தி, உடல் ரீதியான நெருப்பு சக்தி, ஊட்டச் சத்துள்ள சக்தி ஆகும். ஒரு மனிதனின் உடலில் உள்ள இந்த மூன்று வித சக்திகளின் அளவைப் பொறுத்தே அவருக்கு உள்ள நோய் பற்றிய தன்மை புரிந்து கொள்ளப் படுகிறது.

இயற்கை மூலிகைகள் மற்றும் தாதுப்பொருட்களை உபயோகித்து நோய்கான மருந்துகள் தயாரிக்கப் படுகின்றன. மருந்துகளை உட்கொள்வதுடன் இணைந்து தூய்மைப்படுத்துதல் மற்றும் நச்சு நீக்குதல்,உணவுப் பழக்க மாற்றம், உடலுக்கு மஸாஜ்கள், தியானம் போன்ற அம் சங்களை உபயோகித்து நோய் தடுத் தல், நோய் நீக்குதல் போன்ற



முயற்சிகளை ஆயுர்வேதம் கடைப் பிடிக்கிறது. ஆயுர்வேத மருத் துவத்தில் ''ஐந்து அறிவு மருத்துவம்'' என்ற முறை கை யா ளப்படுகிறது.

டயட் என்ட் ஹேர் பலிசம், அரோமா தெரபி, கலர் தெரபி, சவுண்ட் தெரபி, டச் தெரபி என்பனவையே அந்த 5 முறைகளாக குறிப்பிடப் படுகிறது.

சுற்றுச்சூழலுடன் ஒத்திசைவு கொண்ட மனித உடலே ஆரோக் கியமான நிலையில் நிலவும் என் றும், தட்ப வெப்ப மாறுதல்களும் மனித உடலுடன் நேரடித் தொடர்பு கொண்டுள் ளதால் அதற்கேற்ற சிகிச்சைகள் கையாளப்பட வேண்டும் என்றும் ஆயுர்வேதம் நம்புகிறது.தற்போது ஆயுர்வேத மருத் துவ முறையை மிகச்சிறந்த மாற்று மருத்துவ முறையாக உலகெங் கும் கடைப்பிடிக்க தொடங்கி யுள்ளனர். இம் மருத்துவ முறையில் மிகக் கடுமையான நோய் களுக்கும் சிறந்த சிகிச்சை உள்ளதுடன், இம் மருத்துவ முறையின் மருந்துகளால் எந்தவிதப் பக்க விளைவு களும் ஏற்படாது என்பதால், உல கை இம் மருத்து முறை யின் பால் வெகுவாக ஈர்த்து வருகிறது.

ஆயுர்வேதத்தில் பட்டப்படிப்பு முடிப்பவர்களுக்கு பச்சிலர் ஒப் ஆயுர்வேதிக் மெடிசின் மற்றும் சயின்ஸ் (BAMS) அல்லது ஆயுர் வேதாச் சார்யா என்ற பட்டங்கள் வழங் கப்படுகின்றன.

இம் மருத்துவ படிப் புகளை ஐந்தரை ஆண்டுகளில் படித்து, பின் ஓராண்டு இன் பர்ன்ஷிப் பயிற்சி மேற் கொள்ளவேண் டும். பி.ஏ.எம். எஸ். படிப்பு க ளில்இணையவிரும்புவர்கள் க.பொ.த. உயர்தரத்திற்கு இணையான படிப் பில் இயற்பியல், வேதியியல், உயிரியல் கட்டாயம் படித்திருப்பதுடன் சமஸ்கிருத மொழியையும் படித்தி ருந்தால் நல்லது.

இந்தியாவில் இந்தப் படிப்பில் சேர நுழைவுத் தேர்வுகளை எழுதி வெற்றி பெற வேண் டும். அதன் பின்னரே பி.ஏ. எம்.எஸ்.ல் சேர முடியும்.பி.ஏ.எம்.எஸ்., முடித்தவர் கள் ஆயுர் வேதத் துறையில் முது நிலைப் படிப்புக்களாக உள்ள எம்.டி அல்லது எம்.எஸ். ஸை மூன்றாண்டுகளில் முடிக்கலாம். எம்.பி. பி.எஸ். முடித்த வர்க ளும், ஓராண்டு இன்டர்ன் ஷிப் முடித்த பின் ஆயுர் வேதத்தில் முது நிலைப் படிப் புகளைப் படிக்கலாம்.

ஆயுர்வேதத் துறை யில் மருந் தியலாளர்,அறுவை சிகிச் சையாளர், உணவு நெறியாளர், மகப்பேறு மருத்துவர், ஆசிரியர், பஞ்சகர்மா பயிற்சியாளர் என்பது போன்ற 17விதமான சிறப்பு புலங்கள் உள்ளன. ஆயுர்வேதம் பயின்ற வர்களுக்கு தனியார் துறையில் நல்ல வேலைவாய்ப்புகள் உள் ளன. தனியாகவும் பயிற்சி மேற் கொள்ள முடியும்.

**ஆர்.யூ.பாலமுருகன்**

ஆயுர்வேதத் தத்துவங்களை மக்களுக்கு போதிப்பது, பஞ்ச கர்மா மையத்தை மேற்பார்வை யிடுவது, ஆயுர்வேதக் கல்லூ ரியில் விரிவுரையாளராகப் பணியாற்றுவது, ஆராய்ச் சிப் பணிகளில் ஈடுபடுவது, ஆயுர் வேதத்தில் பட்டறைக ளையும் , கருத்தரங்குகளை யும் நடத்துவது போன்று விதவிதமான பணிகள் உள் ளது.



ஒருவரின் ஈடுபாட்டைப் பொறுத்துப் பார்க்கலாம். ஆயுர் வேதம் தற்போது உல கெங்கிலும் பிரசித்தி பெற்று வருகிறது.

சில வகை சிகிச்சைகளில் அலோபதி மருத்துவ முறையில் சிகிச்சைக்கு பின் ஒரு வாரம் வரை ஓய்வு தேவைப்படும்.

ஆனால் ஆயுர் வேத முறையில் இந்த கால அவகாசம் தேவைப்படுவதில்லை. ஆயுர்வேத அறுவைச் சிகிச்சைகளில் மயக்க மருந்துகள் உபயோகப்படுத்துவ தில்லை என்பதோடு, வலியில் லாத முறையிலும் அவை செய்யப்படுகின்றன. மேலும், இம்முறையிலான மருந்துகள், பக்க விளை வுகளை ஏறபடுத்துவதில்லை என் பதால் இத்துறை அபரிமிதமான வளர்ச்சி கண்டு வருகிறது.



ஆயுர்வேத மருந்துகளை தயா ரிக்கும் மருந்து நிறுவனங்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வெளிநாட்டினர் இம் மருத்துவ துறையில் பேரார்வம் காட்டி வருகின்றனர்.

வேதிப் பொருட்களை தவிர்த்த இம்முறை, மருந்துகளை மனித உடலும் எளிதில் ஏற்றுக்கொள்வதுடன், சிகிச்சைக்கான பலன்களும் நல்லமுறையில் கிடைக்கின்றன. இதன் காரணமாக, ஆயுர்வேத மருத் துவர்களுக்கு தற்போது அதிக கிராக்கி ஏற்பட்டு வருகிறது.

இந்தியாவில் தற்போது இளநிலை பட்டப்படிப்புக்கு 154 ஆயுர் வேத கல்லூரிகளும், முதுநிலைப் பட்டப் படிப்புக்கு 33 கல்லூரிகளும் உள்ளன.இவை இந்திய அரசின் சுகா தாரத்துறை அமைச் சகத்தின் கட்டுப் பாட்டில் இயங்கும் சென்ட்ரல் கவுன் சில் பார் ரிசர்ச் இன் ஆயுர் வேத அன்ட் சித்தா என்ற அமைப் பின் கீழ் இயங்குகின்றன.

பானரஸ் இந்து பல்கலைக் கழகம், குஜராத்தில் ஜாம் நகரில் உள்ள ஆயுர் வேத பல்கலைக் கழகம் , நேஷன லர் இன்ஸ்டிடியூட் ஒப் பார் மா சூட்டிங்க்ஸ் எட்யுகேஷன் அண்ட் ரிசர்ச் (என்.ஐ.பி. இ.ஆர்.) போன்ற கல்வி நிறுவனங்கள் ஆயுர்வேத படிப்புகளை தரும் சிறந்த கல்வி நிறுவனங்களாகும்.

பி.ஏம்.எம்.எஸ்.பட்டம் படித்த மாணவர்களுக்கு நல்ல ஊதியத் துடன் உள்நாடு மற்றும் வெளிநாடு களில் வேலைவாய்ப்புகள் கொட் டிக் கிடக்கின்றன. ஏராளமான ஆசி ரியப் பணி வாய்ப்புகளும் உள் ளன.

## அறிவுக்கலசம்

# 320 ஜிபி யில் போர்ட்டபிள் ஹார்ட் டிரைவ்

பிளாஷ் டிரைவ் போன்று கைளில் தூக்கிச் சென்று கணனியில் இணைத்துப் பயன்படுத்தக் கூடிய அதிக கொள்ளவு கொண்ட போர்ட்டபிள் ஹார்ட் டிரைவ்கள் ஹார்ட்வெயர் சந்தையில் நிறைய வரத் தொடங்கி உள்ளன. இவற்றில் பல இருந்தாலும் அண்மையில் பார்த்த வெஸ்டர்ன் டிஜிட்டல் நிறுவனத்தின் மை பாஸ்போர்ட் எலைட் 320 ஜிபி டிரைவ் (Western Digital My Passport elite 320GB) மற்ற வற்றிலிருந்து வித்தியாசமாகவும் கூடுதல் வசதிகள் கொண்டதாகவும் இருப்பது தெரிய வந்தது.



ஒளி ஊடுறுவும் நல்ல பிளாஸ்டிக் பக்கில் இது அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் தரும் வழக்கமான அளவில் இது இருந்தாலும் இதில் சில வித்தியாசமான தோற்றம் கிடைக்கிறது. டைட்டானியம், வெஸ்டர்ன் புளூ, செர்ரி சிவப்பு மற்றும் ப்ரான்ஸ் என நான்கு வண்ணக் கலவைகளில் இந்த டிரைவ் கிடைக்கிறது. மிகவும் ஸ்லிம்மா 1.5 செ.மீ. தடிமனில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனால் எளிதாகப் பொக் கெட்டில் போட்டு எடுத்துச் செல்லலாம். டிரைவின் முன்புறம் யு.எஸ். பி.போர்ட் தரப்பட்டு அதற்கு அழகான ஸ்லைடிங் மூடியும் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தூசு போர்டில் அடைவது தடுக்கப்படுகிறது. அருகே தரப்பட்டுள்ள எல்.இ.டி. சிறிய விளக்குகள் டிரைவின் செயல்பாட்டை நமக்குக் காட்டுவதாக அமைக் கப்பட்டுள்ளன.

பல வகையான ஓப்பரேட்டிங் சிஸ்டங்களுடன் இணைந்து செயல் படும் வகையில் இந்த டிரைவ் 32 வகையில் பொர்மட் செய்யப் பட்டுள்ளது. ஆனால் ஏதேனும் ஒரு பைல் 4 ஜிபி அளவுக்கு மேல் இதில் கொப்பி செய் யப்பட வேண்டும் என் றால் இதனை N முறை க்கு போர்மட் செய் திட வேண்டும்.

இந்த டிரைவுடன் தரப்படும் சொப்ட்வெயர் தொகுப்புகள் நம் வேலையைப் பல இடங்களில் எளிதாக்குகின்றன WD SYNC, WD anywhere Backup, Mionet, WD drive Manager என நான்கு புரோ கிராம்கள் கிடைக்கின் றன. WD SYNC இந்த புரோகிராம் வெவ் வேறு கணனிகளுக்கிடையே நம் டேட்டாவினை சின்கரனைஸ் செய்து பயன்படுத்த உதவுகிறது. எந்த லப் டொப் அல்லது டெஸ்க் டாப் கணனிகளில் இதனை இணைத்தாலும் நாம் தேர்ந்தெடுக் கும் அப்ளிகேஷன் சொப்ட்வெயர் தொகுப்புகளில் உள்ள டேட்டா முழுவதும் சுருக்கப் பட்டு பதியப்படுகின்றன. இதில் 128 பிட் என்கிரிப் சன் பயன்படுத்தப்படுகிறது. இதனை இன்டர்நெட்டில் இணைத்துப் பயன் படுத்துகையில் தளங்களை அடையாளம் கண்டு டேட்டாவினைத்தானாக அப்டேட் செய்து கொள்கிறது.

WD anywhere Backup புரோகிராம் ஒரு எளிய பக் அப் மற்றும் ரெகவரி புரோகிராம் ஆகும். தானாகவே பக் அப் எடுத்து பாதுகாக் கிறது .இதனுடன் வரும்Mionet புரோ கிராம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இதனைப் பயன்படுத்தி வீடு அல்லது அலுவலகத்தில் உள்ள கணனியுடன் தொடர்புகொண்டு அதில் உள்ள டேட்டாவினைப் பெற் றுக்கொள்ளலாம். எந்த கணனியை எல்லாம் ரிமொட்டில்இணைக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதில் இந்த சொப்ட்வெயர் தொகுப் பினைப் பதிந்து கொள்ள வேண்டும். மியோ நெட் எக்கவுண்ட் ஒன்றையும் உருவாக்கிக்கொண்டு இதனைப் பயன்படுத்தலாம்.

இதற்கான கீ இந்த டிரைவ் இயங்கும் வரை பயன்படுத் தும் படி தரப்படுகிறது. இதன் மூலம் இன்டர் நெட்டில்இணைந்து நாம் ஏற்கன வே தயார் செய்துள்ள எந்த கணனியையும் இணைத்து டேட்டா வினைப் பரிமாறிக் கொள்ளலாம்.

WD drive Manager புரோகிராம் இந்த டிரைவ் பயன்படுத்தப்படும் கணனியை சிஸ்டம்ட்ரேயில் அமர்ந்து கொண்டு டிரைவ் குறித்த தகவல் களைத் தருகிறது. இந்தடிரை விற் கான சொப்ட் வேயர் இதிலேயே பதிந்து தரப்படுவதால் தனியாக சிடி எதுவும் தரப்படவில்லை.

எனவே இதனைப்பயன்படுத்தத் தெடங்குகையில் இதன் பக் அப் கொப்பி ஒன்றை எடுத்து வைத்துக் கொள்ளவது நல்லது.இதன் கண் கவர் தோற்றம், பயன்பாடு நிச்சய மாக இதனை மற்ற போர்ட்டபிள் ஹார்ட் டிரைவ்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இதன் நீளம் 126.1 5மி.மீ., அகலம் 79.5 மி.மீ., எடை 18 கிராம், உயரம் 15மி.மீ ஆகும்.

# உங்களுக்கு தெரியுமா ?

◆ நீங்கள் இன்டர்நெட் எக்க வுண்ட் வைத்துள்ள வங்கி அல்லது ஒன்லைன் வங்கி ஏதேனும் ஒன்றிலிருந்து அல்லது நிதிப் பரிமாற்றம் மேற்கொள்ளும் இணையத்தளத் திலிருந்து (ஏ.கா.இ-பே, பே-பால்) உங் கள்எக்கவுண்ட் செக்செய்து கொள்ளுங்கள். இல்லையேல் உங் களுக்கான பணம் போய் விடும் என்று ஒரு இமெயில் உங்கள் பெயருக்கு அந்த வங்கி அல்லது அமைப்பின் பெயரில்வருகிறதா? இதுநிச்சயமாய்உங் களைச்சிக்க வைக்கும் ஒரு இமெயில் தான். இதனைத் திறந்தால் உங்களைத் தூண்டும் ஒரு செய்தியைக் கொ டுத்து ஒரு தள முகவரியும் தரப்ப டும். இதில் கிளிக்செய்து தளத்திற் குச் சென்றால் உங்கள் கணனி யில் உள்ள பேர்சனல் தகவல்க ளைத் திருடும் வைரஸ் புரோகிராம் இறக்கப்படும் .அது மேலும் சில நாச வேலைகளில் ஈடுபடும்.

◆உங்கள் கணனியில் இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்து விண் டோக்களையும் இரு கீகளை ஒரு சேர இணைத்து அழுத்தி மறைய வைக் கலாம் மீண்டும் அதனைப் பெறவும் செய்திடலாம். அந்த கீகள் விண்டோஸ் கீ+எம்கீ மற்றும் விண்டோஸ் கீ+டிகீ. உங்களுடைய கணனி மேக் வகைக்கணனியாக இருந்தால் எப் 11 கீயை அழுத் தவும் அண்மையில் வந்த மேக்லப் டொப் கணனியில் இது கமாண்ட் + எப்3 கீயாக மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் டெஸ்க்டாப்பில் வைத் திருக்கும் புரோகிராம்களை இயக்க வும் அதில்சேவ் செய்துவைத்தி ருக்கும் தேவையற்ற டவுண்லோட் செய்யப்பட்ட படங்க்ளை நீக்கவும் முடியும்.

◆ஒரு கமராவில் எடுக்கப்படும் படத்தின் தன்மையை அந்த கமரா விற்கான மெகா பிக்ஸெல் திறன் கொண்டு மட்டும் கணக்கிடக்கூடாது . அதற்கும் மேலாக சென்ஸர் சை ஸையும் கவனிக்க வேண்டும். இது வே படங்களின் தன்மையை அறுதி யிடும் அம்சமாகும்.

சிலர் எதிர்க்கிறார்கள் என்பதனால் நன்மையான ஒன்றை அழித்துவிட நான் சம்மதியேன். இதை வேறு வார்த்தையில் சொன்னால் தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தில் நம்பிக்கை உள்ளவன் நான். – இங்கர்சால்

வலம்புரி

## அறிக்கையோடு மட்டும் ஐ.நாவின் பணி முடிந்து விடுகிறதா?

வன்னி நிலைவரம் குறித்து ஆராய்வதற்காக இலங்கைக்கு வந்த ஐ.நா. சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் தனது அறிக்கையைப் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்துள்ளார்.

அவரின் அறிக்கையில் முக்கியமான விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், போர்க்களத்தில் சிக்குண்ட பொதுமக்கள் பேரவலத்தை எதிர்கொண்டுள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

இவையெல்லாவற்றையும் பாதுகாப்புச் சபையில் ஒப்புவித்த ஹோம்ஸ் தனது கடமை முடிந்துவிட்டதாக எண்ணியிருக்கலாம்.

யுத்தம் இடம்பெற்றுவரும் வன்னிப் பகுதியில் சிக்குண்டுள்ள பொதுமக்கள் மிகப் பெரும் மனிதப் பேரவலத்தை எதிர்கொண்டுள்ளனர் என ஐ.நா. சபையில் கூறுவதன் மூலம் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை.

இன்னல்படும் மக்களைப் பாதுகாப்பது முக்கிய பணியாகும். எனினும் இது விடயத்தில் ஐ.நா. சபையின் தொடர் நடவடிக்கை என்ன?

குண்டு வீச்சுக்களால் –பட்டினியால் –மருந்துத் தட்டுப்பாட்டினால் –போசாக்கின்மையால் பலியாகும் மக்களைக் காப்பாற்றுவதற்கு ஐ.நா. சபை எடுக்கும் நடவடிக்கை யாது?

யுத்தம் இடம்பெறும் வன்னியிலிருந்து வெளியேறி வவுனியாவில் இடைத்தங்கல் முகாம்களில் உள்ள மக்களின் பாதுகாப்பு, அவர்களின் எதிர்கால வாழ்க்கை, உறவினர்களுடனான தொடர்பு இவையெல்லாவற்றுக்குமான தீர்வு தான் என்ன?

இதுபோன்ற கேள்விகளுக்கு எந்தவிதமான விடையும் இல்லாமல் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வன்னி நிலைவரம் முடிந்துபோயுள்ளது.

ஆயுத விற்பனையில் ஈடுபடும் வல்லரசு நாடுகள் சிறிய நாடுகளில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்த –அது தொடர்பில் கவனம் செலுத்த ஒரு போதும் முன்வரப் போவதில்லை.

இதற்கு மேலாக பொருளாதாரப் பெரு மந்தத்தில் சிக்குண்டுள்ள வல்லரசுகள் தங்களை மீட்டெடுக்கும் பணியில் கவனம் செலுத்துமேயன்றி இலங்கை போன்ற நாடுகளில் இடம்பெறும் சண்டைகளை நிறுத்த முன்வரப் போவதில்லை.

இதே வழியில்தான் ஐ.நா. சபையின் நகர்வும் இருக்கும்.

ஈராக்கில் நடந்த அமெரிக்க ஆக்கிரமிப்பை தடுக்க முடியாத ஐ.நாவால் எதனையும் சாதிக்க முடியும் என யாரேனும் சிந்திப்பார்களாயின் அதுவே இந்த நூற்றாண்டின் மிகப் பெரும் தவறான சிந்தனையாகும்.

ஆக, இலங்கை விவகாரத்தில் மோதல்களைத் தவிர்த்து நாம் எழுவோம், வாழ்வோம், இலங்கை என்ற அழகிய நாட்டை கட்டியெழுப்புவோம் என்ற கோஷத்துடன் மக்கள் ஒன்று திரண்டு உகந்த தலைமையைத் தெரிவு செய்யும் போதுதான் போர் ஓயும். மனித வதை ஒழியும்.

# வன்னியில் மருந்துகள் இன்மையால் நூற்றுக்கு மேற்பட்டோர் உயிரிழப்பு

## புதுமாத்தளன் வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு புதுமாத்தளன் வைத்தியசாலையில் மருந்துகள் இல்லாததால் குறுகிய காலத்தினுள் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர். இந்தநிலைமை தொடர்ந்தும் நீடிக்கும் பட்சத்தில் இன்னும் பெரும் எண்ணிக்கையிலானோர் உயிரிழக்கும் அபாயம் உள்ளது எனமேற்படி வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்பாவி மக்களின் உயிர்களை பாதுகாக்க சம்பந்தப்பட்டவர்கள்விரைந்து தேவையான மருந்துகளை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லாவிட்டால் பெரும் எண்ணிக்கையிலானனோரின் உயிர்களைக் காப்பாற்ற முடியாமல் போய்விடும்.

காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் நேற்றுமுன்தினம் நான்கு பேர் மருந்துகள் இல்லாமல் உயிரிழந்துள்ளனர். அவர்களை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தியிருந்தால் காப்பாற்றி இருக்க முடியும்.

சிறுவர் சிறுமியருக்கு போஷாக்கு இன்மை ஏற்பட்டுள்ளது. உணவு இல்லாமல் மயக்கமடைந்த நிலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையிலும் உணவு இல்லை. இவர்களை காப்பாற்ற மருந்துகளும் இல்லையென கிளிநொச்சி மாவட்ட முன்னாள் வைத்திய அத்தியட்சகரும் தற்போது புதுமாத்தளன் வைத்தியசாலையில் கடமையாற்றி வருபவருமான டாக்டர் ந.சத்தியமூர்த்தி,புதுமாத்தளன் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய அதிகாரி டாக்டர் வரதராஜன்ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

டாக்டர் சத்தியமூர்த்தி மேலும் கூறியதாவது; வன்னியில் குறுகிய இடத்தில் 3 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். கடந்த நான்கு மாதங்களாக மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்படவில்லை. அண்மையில் இரண்டு நாட்களுக்கு மட்டும் தேவையான மருந்து வகைகள்அனுப்பி வைக்கப்பட்டன.

வன்னியில் இன்று உணவைப்போல் மருந்து தேவைகளும் அதிகரித்துள்ளன. சத்திர சிகிச்சைகளுக்கு தேவையான மயக்க மருந்து, அன்டிபயடிக், சேலைன் மற்றும் விசர்நாய்க்கடி ஊசிமருந்து போன்ற அனைத்து மருந்து வகைகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவி வருகிறது. இது குறித்து சுகாதார அமைச்சுக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகளின் அலுவலகம் ஆகியவற்றிற்கு அறிவித்துள்ளேன். பாதுகாப்பு அமைச்சு அனுமதி கிடைக்கவில்லை என எமக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

மருந்துகள் இல்லாததால் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

வயிற்றோட்டம், வாந்திபேதி, அம்மை, ஈரல் அலர்ஜி போன்ற நோய்கள் வேகமாக பரவிவருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை எறிகணைத் தாக்குதலில் காயமடைந்த 46 பேர் புதுமாத்தளன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். சிகிச்சை அளிக்க போதிய மருந்துகள் இன்றியே இவர்கள் உயிரிழந்துள்ளனர். வெளி நோயாளர் பகுதியில் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கபோதிய மருந்துகள் இல்லாததால் அந்த நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளது என்றார். (ஓ)

## மாணவர் சங்கத் தேர்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் மாணவர் சங்கத்தேர்தல் இன்று காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளதால் கல்விப் பீடம் தவிர்ந்த ஏனைய பீடத்தில் கற்கை நெறியினைத் தொடர்கின்ற மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் கேட்டுக் கொண் டுள்ளார். (6)

## திருமலையில் சுற்றிவளைப்பு தேடுதல் ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது

(திருகோணமலை)

திருகோணமலையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதில் 5 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் திருகோணமலை மாவட்டத்தில் பொலிஸாரும் இராணுவத் தினரும் இணைந்து தமிழர்கள் அதிகமாக வாழ்கின்ற உப்புவெளிக்கிராமத்தை சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்நடவடிக்கையின் போது 5 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அன்றையதினம் திருகோணமலை புகையிரத நிலையம், பேருந்து நிலையம் மற்றும் நகரப் பகுதிக்கு பயணித்துக் கொண்டிருந்த துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் மற்றும் பாத சாரிகள் உட்பட அனைவரும் கடும் சோதனைக்குட் படுத்தப்பட்டுடன் அனைத்து வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## தவக்காலப் பொழிவு



### கதியற்றோரை கைதூக்கி விடுவோம்

தற்போது சிறிய நிகழ்வுகளுக்கெல்லாம் பெருவிருந்துகளை ஏற்பாடு செய்வது வழமையாகிவிட்டது. தமது செல்வச் செழிப்பையும் சமூக அந்தஸ்தையும் படம்பிடித்துக் காட்டும் வகையில் நவீன உணவு வகைகள் பரிமாறப்படுகின்றன. தமக்கு வேண்டியவர்கள் உயர்ஸ்தானத்தில் உள்ள பெரும்புள்ளிகளை அழைத்து பெருமெடுப்பில் விழாக்கொண்டாடி செலவு செய்யப்படுகிறது. அவ்வாறே பொதுப்பணிகளிலும் அறிமுகமானவர்கள் வசதிபடைத்தோர் கவனிக்கப்படுகின்றனர்.

ஒரு புறம் இவ்வாறு இடம்பெற மறுபுறம் அடுத்த வேளைக்கு யார் உணவு கொடுப்பார்கள், என் தாகத்தை யார் தீர்ப்பார்கள். யார் என்னை ஏற்றுக்கொள்வார்கள். மாற்றி உடுக்க உடைதருவார்கள். யார் சிறையில் தனிமையில் இருந்து மீட்பார்கள். யார் என்நோயை மாற்றுவார்கள் என அங்கலாய்த்து அழுகுரல் எழுப்பும் மக்கள் அனேகர் உள்ளனர்.

இவர்களின் இதய ஆதங்கத்தைப் புரிந்து கொண்டு எந்த இடத்தில் யாருக்கு உதவி தேவை என்பதை இனங்கண்டு உதவி செய்வோம். ஆமை அமைதியாக ஆயிரம் முட்டை இடுவதுபோல் பிறர் அறியாது உதவிகளை வழங்க பழகிக் கொள்வோம். வலதுகை கொடுப்பதை இடதுகை அறியா திருப்பதே கொடைக்கு சிறப்பாகும். ஏழைகளை மகிழ்விப்போர் மீது இறைவன் தம் ஆசி கள், கொடைகளை நிறைவா கப் பொழிவார்.

நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாடும் கதியற்றோரைகை தூக்கி விடுவதாக அமையட்டும். ஏனெனில் மிகச் சிறியோராகிய 'இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் செய்தவையெல்லாம் எனக்கே செய்தீர்கள் எனப்பூரிப் படைந்து ஆசிபெற்றவர்களே வாருங்கள் உலகம் தோன்றிய முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாக பெற்றுக் கொள்ளுங்கள் என இறைவன் நற்பேறு அளிப்பார்.

*எஸ்.யேசுதாஸ்*

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## சமத்துவத்தை வளர்த்தல்



மனிதனுக்குக் கல்வி அவசியம். ஜனநாயகம், மனிதசமத்துவம் என்றெல்லாம் இன்று பேசுகிறார்கள். தான் எல்லாருடனும் சமம் என்பதை ஒருவன் எப்படித் தெரிந்து கொள்வான்? அவனுக்கு வலுவான மூளை வேண்டும், அசட்டுக் கருத்துக்கள் இல்லாத தெளிந்த மனம் வேண்டும், மனத்தை மூடியிருக்கும் மூட நம்பிக்கைகளை ஊடுருவி, தன்னுள் ஆழத்தில் உள்ள தனி உண்மையை அவன் அறிய வேண்டும். எல்லா நிறைவும், எல்லா சக்திகளும் ஏற்கனவே தன்னுள் உள்ளன, அவற்றைப்பிறர்தனக்குத் தரத் தேவையில்லை என்பதை அப்போது அவன் உணர்வான்.

இதை உணர்ந்த அந்தக் கணமே அவன் சுதந்திரன் ஆகிறான், சமத்துவம் பெறுகிறான் தன்னைப் போலவே எல்லோரும் பூரணர்களா கவே உள்ளனர், உடலாலோ உள்ளத்தாலோ தான்யார்மீது அதிகாரம் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்பதையும் அவன் உணர்கிறான். தன்னை விடக்கீழான நிலையில் யாரும் ஒரு போதும் இருந்ததில்லை என்பது அவனுக்குத் தெரிகிறது. அப்பொழுது தான்அவன் சமத்துவத்தைப் பற்றிப் பேச முடியும், அதற்கு முன்பு அல்ல.

# “அறுவைச் சிகிச்சை மூலம் பெற்றுள்ள இந்த உயிர் இனி எப்போதும் உங்கள் உயிர்”

## கருணாநிதி உருக்கமான அறிக்கை

(சென்னை)

அறுவைச் சிகிச்சை மூலம்பெற்றுள்ள இந்த உயிர் , இனி எப்போதும் உங்கள்



உயிர் என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் கருணாநிதி எழுதியுள்ள கடித வடிவிலான அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சென்னை உயர்நீதிமன்றத்தில் இலங்கை தமிழர் பாதுகாப்பு அறப்போர் என்று வழக்கறிஞர்கள் தொடங்கி-பிறகு அந்த நீதி மன்றத்திற்குள் சுப்பிரமணியசாமி மீது வழக்கறிஞர்கள் முட்டை வீசியதாக வழக்கு- அந்த வழக்கின் விஸ்வரூபமாக பொலீசார்-வழக்கறிஞர்கள் மோதல் என்று வன்முறைகள் நடைபெற்று-இறுதியாக உச்ச நீதிமன்றம் வரை சிந்தப் பிரச்சினை சென்றுள்ளது.

தி.மு.க. ஆட்சியை கலைக்கவேண்டும் என்று ஒரு கோரிக்கை, அதை உச்ச நீதி மன்றம் உதறித்தள்ளிவிட்டது. சில பொலிஸ் அதிகாரிகளை உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி சென்னையிலிருந்து இந்த அரசு வேறு ஊர்களுக்கு மாற்றியாகிவிட்டது. இன்னும் என்ன?

உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் ஸ்ரீ கிருஷ்ணா கமிஷனை உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது. அந்த கமிஷனின் அறிவு ரையை எதிர்பார்த்து அரசு காத்திருக்கிறது. வழக்கறிஞர்கள் மட்டும் அதில் பொறுமை காட்டலாகாதா?

உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவுகளையெல்லாம் அரசு செயல்படுத்த தயார் என்கிற போது அதே உச்ச நீதிமன்ற கருத்தை ஏற்று வழக்கறிஞர்கள் அனைவரும் மார்ச் 2 ஆம் திகதி நீதிமன்றங்களுக்கு செல்வது தானே முறையாகும். இல்லையேல் இது இலங்கை தமிழர் பிரச்சினைக்கான போராட்டமல்ல; இங்குள்ள தி.மு.க.ஆட்சிக்கு எதிரான போராட்டம் என்றுதானே உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது.

என் கண்ணீரை-கவலையை- துச்சமாகக் கருதுகிறார்கள். இருக்கும்வரையில் ஏழை பாழைகளுக்கு பொட்டுப் பூச்சிகளாய் ,புன் மைத் தேரைகளாய் ஆக்கப்பட்டுள்ள அடித் தட்டு மக்களுக்கு- எதையாவது செய்ய வேண்டும். அதையும் அவர்களை வாழ வைக்கும் வண்ணம் செய்ய வேண்டும். தன்மானம் பெறும் வண்ணம் செய்ய வேண்டும். தமிழ் வானம் இருக்கு மட்டும்- அதில் தமிழ் மக்களுக்கா நான் பாடும் கானம்- ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும். நான் இல்லாவிட்டாலும் அது ஒலித்துக் கொண்டே இருக்கும் என நினைத்துக் கொண்டே வாழ்வேன்.

அகவை 85 இப்போது! அறுவைச் சிகிச்சை மூலம் பெற்றுள்ள இந்த உயிர்-என்னுயிர் என்று எழுதப்பட்டாலும்; இனிய தமிழர்களே , என்னரும் உடன்பிறப்புகளே, இது அப்போதும்-இப்போதும்-இனி எப்போதும் உங்கள் உயிர்!

இவ்வாறு அறிக்கையில் கருணாநிதி கூறியுள்ளார். (6)

## சென்னை அண்ணா பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிப்பு

(சென்னை)

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் , மு.க.ஸ்டாலின், சந்திரயான் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை ஆகியோருக்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்குகிறது.

தமிழகத்தின் கிராமப்புற மற்றும் நகர்புற மேம்பாட்டுக்கு ஆற்றிய பணிகளுக்காகவும் சென்னையில் மேம்பாலங்கள் அமைத்து போக்குவரத்து நெரிசலைக் குறைக்க நடவடிக்கை எடுத்ததற்காகவும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் , நிலவில் இந்தியாவின் காலடியை பதிக்கச் செய்து உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை தலை நிமிரச் செய்ததற்காக சந்திரயான் -1 திட்ட இயக்குனர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரைக்கும் ,2ஆஸ்கார் விருதுகளை வென்று உலக அளவில் இந்தியாவுக்குப் பெருமைத்தேடித் தந்ததற்காக இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானுக்கும் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப் படுகிறது.(6)

# வைகோ உள்ளிட்ட அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு



(சென்னை)

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் உருவப்படத்தை எரித்த வைகோ உள்ளிட்ட 195 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் .தமிழக அரசு அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறேன். அனைவரையும் உடனே விடுதலை செய்ய வேண்டும் என்றார் பழ. நெடுமாறன்.

தூத்துக்குடி அனல்மின்நிலைய அடிக்கல் நாட்டு விழாவில், மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி பங்கேற்றார். அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கறுப்புக் கொடி, துடைப்பங்களுடன் வைகோ தலைமையில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரணாப் முகர்ஜிக்கு எதிராக கோஷங்கள் எழுப்பி அவரது உருவப் படங்களை தீயிட்டு எரித்தனர்.

இதனால் ,தூத்துக்குடியில் பரபரப்பு ஏற்பட்டது.

வைகோ, ம.தி.மு.க.,எம்.எல்.ஏ.க்கள் வரதராஜன் , ஞானதாஸ் உள்ளிட்ட 195 பேரை பொலீசார் கைது செய்து, மாலை வரை திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர்.

இரவில் அவர்கள் பாளையங்கோட்டை மத்தியசிறைக்கு கொண்டு செல்லப்பட்டு, காலை 5.20 மணியளவில் வைகோ உள்ளிட்ட 195 பேரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டதற்கு இலங்கைத் தமிழர் பாதுகாப்புஇயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்கூறியதாவது .

தூத்துக்குடி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு எதிராக கறுப்புக்கொடி காட்டிய மதிமுக பொதுச் செயலாளர் வைகோ மற்றும் இந்தியகம்யூனிஸ்ட் , பாமக உள்ளிட்ட கட்சிகளைச்சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கறுப்புக்கொடி காட்டுவது ஜனநாயக உரிமையாகும். அந்த உரிமையை பறிக்கும் வகையில் தமிழக அரசு அவர்ளைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளதை வன்மையாக் கண்டிக்கிறேன்.

வைகோ உள்பட கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனே விடுதலை செய்ய வேண்டும் என்றார் பழ.நெடுமாறன் . (6)




# இலங்கைப் பிரச்சினையால் திமுக-காங்கிரஸ் உறவு பாதிக்காது

## கனிமொழி தெரிவிப்பு

(கோழிக்கோடு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்க்க மத்திய அரசை திமுக தொடர்ந்து வலியுறுத்தி வருவதால் இரு கட்சிகளுக்கும் இடையேயான உறவில் எந்த பாதிப்பும் வராது என்று மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி தெரிவித்துள்ளார்.

கோழிக்கோடு தமிழ்ச் சங்கத்தின் பொன் விழா ஆண்டு நிகழ்ச்சியில் பங்கேற்க கோடிக்கோட்டுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வந்த அவர் செய்திளாளர்களிடம் கூறியதாவது,

இலங்கைப் பிரச்சினையை தீர்க்க மத்திய அரசை திமுக.தொடர்ந்து வலியுறுத்தும். அங்கு தொடர்ந்து பிரச்சினைக்கு தீர்வு காண



ப்படவேண்டும் என்பதே திமுகவின் முக்கியக் கோரிக்கை.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதாக பல்வேறு தொண்டு நிறுவனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அங்கு மனித உரிமைகள் மீறப்படுவதை நிறுத்த ஐ.நா சபை மூலம் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (6)

# இலங்கைத்தமிழர்களையும் இந்தியர்களாகவே கருதி அவர்களுக்கு ஆதரவுக்குரல் கொடுங்கள்

## தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் வசந்தி ஸ்டான்லி உருக்கம்

(சென்னை)

இலங்கையில் கொல்லப்படும் அப்பாவித் தமிழர்களையும் இந்தியர்களாகப் பார்க்க வேண்டும். அவர்களுக்காக இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல்கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்தால் எல்லோரது பாதங் களிலும் வீழ்ந்து வணங்கவும் தயாராக இருக் கிறேன் என்று தி.மு.க நாடாளுடன்ற உறுப்பினர் வசந்தி ஸ்டான்லி உருக்கமாகப் பேசினார்.

இந்திய நாடாளுமன்றத்தின் கடைசிக் கூட்டத் தொடாரின் இறுதி நாளன்று நாடாளுமன்ற அவையில் இரண்டு ஒஸ்கார் விருதுகளைப் பெற்ற இசையமைப்பாளர் ஏ.ஆர் ரகுமானைப் பராட்டி சிறப்பு தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டது.

அப்போது பேசிய தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழரான ரகுமானுக்கு எங்களின் மனமுவந்த பாராட்டுக்களைத் தெரிவித்தக் கொள்கிறோம் என்று கூறினர். இதற்கு டில்லி மற்றும் வடமாநிலங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித் தனர்.

“ரகுமானை இந்தியர் என்று சொல் லுங்கள் தமிழர் என்று கூறி பிரித்துப் பேசாதீர்கள்” என்று அவர்களில் சிலர் கருத்து தெரிவித்தனர்.

இதையடுத்து பேசியபேதே தி.மு.க உறுப்பினரான வசந்தி ஸ்டான்லி மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் பேசியதாவது,

ஏ.ஆர்.ரகுமனை நாங்கள் தமிழர் என்கிறோம். அவரால் இந்தியாவிற்கு பெருமை என் றதும் இந்த அவையில் உள்ள எல்லோரும் அவரை இந்தியராகப் பார்க்கச் சொல்கிறீர்கள். அதை ஏற்றுக்கொள்கிறேன்.

அது போலவே இலங்கையில் கொல்லப்படும் தமிழர்களையும் எங்கள் இந்தியர்களாகவே பாருங்களேன். அவர்களுக்காக ஆதரவுக் குரல் எழுப்பி நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வற்புறுத்துங்களேன்.

அதைச் செய்தால்உங்கள் பாதங்களில் விழுந்துவணங்கவும்நான்தயார்க இருக்கிறேன்.

# தமிழில் பிறமொழி கலப்பு வேதனை அளிக்கின்றது

(சென்னை)

தமிழர்கள் பிற மொழி கலப்பில்லாமல் தமிழ் பேசுவதில்லை.இது மிகக் கேவலமாக, அவமானமாக உள்ளது என்று முன்னாள் துணைவேந்தர் க . ப.அறவாணன் வருத்தம் தெரிவித்துள்ளார்.மக்கள் அணுக்கப் பேர வை சார்பில் கபிலன்வைரமுத்து எழுதிய பூமரேங் பூமி நூல் அறிமுக விழா சென்னையில் நடைபெற்றது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை முன்னாள் துணை வேந்தர் க.ப.அறவாணன் வெளியிட நடிகர் பிரகாஷ்ராஜ் பெற்றுக்கொண்டார்.

விழாவில் அறவாணன் பேசியதாவது, கல்வி, பண்பு ,அறிவு ஆகியவை தலைமுறையாய் தொடர்ந்து அமையும் சூழல் அபூர்வமானது. அத்தகைய படைப்பாளராக கபிலன் வைரமுத்து விளங்குகிறார். கல்லூரியில் படிக்கும் போது படிப்பு, விளையாட்டு பொழுது போக்கு என மாணவர்கள் நேரத்தைச் செலவழிப்பர். இந்த காலகட்டத்தில் இளைஞர்களுக்காக ஓர் இயக்கத்தை கபி



லன் ஆரம்பித்துள்ளார்.தற்போது தமிழர்கள் பிறமொழி கலப்பில்லாமல் பேசுவதில்லை. இது மிகக்கேவலமாக, அவமானமாக உள்ளது. பிரெஞ்சு நாட்டில் ஆங்கிலம் கலந்து பேசுவதற்கு ஒப்புக்கொள்ள மாட்டார் கள். இதற்காக அரசுஆணையே உள்ளது. இங் கும் இது போன்றநிலைவரவேண்டும்என்றார். 6

# சதமடித்தனர் சங்கக்கார, சமரவீர இலங்கை அணி வலுவான நிலையில்



(லாகூர்)

சங்கக்கார,சமரவீரவின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி முதல் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை யிழந்து 317 ஓட்டங்களை எடுத்திருந் தது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலை யில் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று லாகூரில் ஆரம்ப மானது.

இப்போட்டியுடன் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா பதவியிலிருந்து விலகுவதனால் இலங்கை அணி வெற்றி பெறவேண்டும் என்ற இலக்குடன் களமிறங்கியது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித் தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் வர்ணபுர (8),பரணவிதான (21) ஆட்டமிழக்க 35 ஓட்டங்களை எடுத்த நிலையில் 2 விக்கெட்டுக்களை இழந்தது. எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-மஹேல ஜெயவர்த் தனா ஜோடி சிறப்பாக துடுப் பெடுத்தாடியது.

எனினும் மஹேல ஜெயவர்த்தனா 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 96 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களை இழந் தது. தொடர்ந்து 4 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-சமர வீர ஜோடி சிறப்பாகத் துடுப் பெடுத் தாடி ஓட்டங்களைக் குவிக்க இலங் கை அணி சரிவிலிருந்து மீண் டது.

இதில் சமரவீர 159 பந்துகளிலும் சங்கக்கார 193 பந்துகளிலும் தமது சதத்தை பூர்த்தி செய்து அசத்தினர்.

இந்த ஜோடி இணைப்பாட்டமாக 204 ஓட்டங்களை எடுத்த நிலையில் சங்கக்கார 104 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். இந்தநிலையில்முதல்



நாள் ஆட்ட நேர முடிபில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக் களை இழந்து 3,17 ஓட்டங்களை எடுத் திருந்தது.

இதில் சமரவீர 133 ஓட்டங்களுடனும் டில்சான் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் உமர் குல் 3 விக்கெட்டுக்களையும் யசீர் அரபாத் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# சர்வான் இரட்டைச்சதம்; மேற்கிந்தியத்தீவுகள் பதிலடி



(பார்படோஸ்)

சர்வானின் பொறுப்பான இரட்டைச் சதத்தின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய நான்காம் நாள்மதிய போசன இடைவேளையின் போது 5 விக்கெட்டுக்களை இழந்து 483 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 டெஸ்ட்,5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் நடைபெற்று முடிந்த மூன்று போட்டிகளில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் நான்காவது டெஸ்ட் கடந்த 26 ஆம் திகதி பார்படோஸில் ஆரம்ப மானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 600 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது. இதில் அணித் தலைவர் ஸ்றொரஸ் 142 ஓட்டங்களையும் பொப்ரா 104 ஓட்டங்களையும் கொலின்வூட் 96,குக் 94 ஓட்டங்களையும் எடுத் தனர். பந்துவீச்சில் எட்வோட்ஸ் 3 விக்கெட்டுக்களையும் ரெய்லர், பவல் மற்றும் பென் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். தொடர்ந்து முதலாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந் தியத்தீவுகள் அணி சர்வானின் சிறப் பான இரட்டைச் சதத்தின் மூலம் நேற் றைய நான்காம் நாள் ஆட்ட மதியபோசனஇடைவேளையின் போது 5 விக்கெட்டுக்களையிழந்து 483 ஓட்டங்களை எடுத்து வலுவான நிலை யிலிருந்தது.

இதில் தனது இரண்டாவது இரட்டைச் சதத்தை கடந்த சர்வான் 229 ஓட்டங்களுடனும் ராம்டீன் 56 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந் ததுடன் சந்தர் போல் 40,ஹயில் 55 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்வான் 3 விக்கெட்டுக்களையும் அன்டர்சன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். நான்காம் நாள் ஆட்டம் நேற்று (இலங்கை நேரப்படி இரவு) மதிய போசன இடை வேளையின் பின்பு தொடர்ந்து நடைபெற்றது.

# இலங்கை-சிம்பாவே தொடர் ஒத்திவைப்பு

ஒளிபரப்பு சிக்கல் காரணமாக இலங்கை, சிம்பாவே அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடர் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் சிம்பாவே அணிகளுக்கு இடையிலான ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நடக்க இருந்தது. மார்ச் 13 திகதி ஆரம் பமாக இருந்த இந்த தொடர் தற் போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

டென் ஸ்போர்ட்ஸ் சனல் தற் போது தென்னாபிரிக்க-அவுஸ்திரேலிய அணிகள் மற்றும் இங்கிலாந்து -மேற்கிந்தியதீவுகள் அணிகள் மோதும் டெஸ்ட் தொடர்களை நேரடியாக ஒளிபரப்பி வருகிறது.

இதனால் இலங்கை தொடரை நேரடி ஒளி பரப்பு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து தொடரை சில மாதங்களுக்கு ஒத்திவைக்க வேண்டும் என டென் ஸ்போர்ட்ஸ் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட இலங்கை,சிம்பாவே கிரிக்கெட் சபைகள் ஒருநாள் தொடரை மறு திகதி குறிப் பிடாமல் ஒத்திவைத்துள்ளன.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 22





இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 541 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் முரளிதரன் 65 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 179 ஓட்டங்களைக் கொடுத்து சித்து (99), காம்ளி 82,அணித்தலைவர் அசாருதீன் (108), மன்ஜேக்கர் 39 ஆகியோரை ஆட்டமிழப்பு செய்து 4 விக்கெட்டுக் களை வீழ்த்தி அசத்தினார்.

இதன் மூலம் முரளிதரன் தனது 12ஆவது டெஸ்ட் போட்டியில் 49 விக்கெட் என்ற மைல் கல்லை எட்டினார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடிய இலங்கை அணி 231 ஓட்டங்களை மாத் திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து பொலோன் நிலைக்கு தள்ளப்பட்டது.

இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் 8 ஓட்டங்களை எடுத்தார். இதன் மூலம் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 310 ஓட்டங்களை எடுக்க வேண்டும் என்ற கட்டாயத் தில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 215 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகலவிக் கெட்டுக்களையும் இழந்து இன்னிங்ஸ் மற்றும் 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந் தது.

இதில் அதிரடியாக ஆடிய முரளிதரன் 11 பந்துகளில் (2 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார். இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

**50ஆவது மைல்கல்**

இந்நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் 1993ஆம் ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை அகமதாபாத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 119 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

**பாலா**

இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் 5 ஓட்டங்களை எடுத்தார். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுக் களையும் இழந்து 358 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 36.3 ஓவர்கள் பந்துவீசி 7 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 79 ஓட்டங்களைக் கொடுத்து சித்து (43),அணித்தலைவர் அசாருதீன் (152),சயூகன் (9) ஆகி யோரை ஆட்டமிழப்பு செய்து 3 விக்கெட்டுக் களை வீழ்த் தினார்.

அத்துடன் தனது 13ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடிய முரளிதரன் இந்திய அணியின் சித்துவை ஆட்டமிழப்பு செய்ததன் மூலம் 50ஆவது விக்கெட்டை கைப்பற்றினார்.

இதன் மூலம் டெஸ்ட் அரங்கில் குறைந்த போட்டிகளில் (13) 50ஆவது விக்கெட்டை வீழ்த்தியோர் வரிசையில் 9 ஆவது வீரராக சேர்ந்தார்.

1888ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய வீரர் ரோனர் தனது 6ஆவது போட்டியில் 50ஆவது விக்கெட்டை கைப்பற்றியமையே இன்று வரை சாதனையாக உள்ளது.

(பயணிக்கும்)

# எண் விளையாட்டு-26



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாக வர வேண்டும்.

இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப்புறம் கொடுக்கப்பட்டுள்ளது.

1 முதல் 9 வரையான எண்களை பயன்படுத்த வேண்டும். ஆனால் ஒரு வரிசையில் பயன்படுத்திய எண் திரும்ப வரக்கூடாது.

*நேற்றைய முன்தினப் பகுதிக்கான விடை*



*நேற்றைய பகுதிக்கான விடை*



மாநகர சபை, யாழ்ப்பாணம்



# பிரணாப் முகர்ஜியின் அறிக்கைக்கு தமிழக முதல்வர் கருணாநிதி வரவேற்பு



(சென்னை)

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் அறிக்கையை வரவேற்பதாக தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

முதல்வர் கருணாநிதி தனது கட்சித் தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் கூறியிருப்பதாவது,

தூத்துக்குடி அனல் மின்நிலைய அடிக்கல் நாட்டு விழாவில், மத்திய வெளியுறவு அமைச்சரும் என் நீண்டகால நண்பருமான பிரணாப் முகர்ஜி என் உடல்நிலை விரைவில் குணமாகி நலம்பெற வாழ்த்தியுள்ளார்.

அது கேட்டு எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை விட இரட்டிப்பான மகிழ்ச்சி எது தெரியுமா? அவர் உரையில் குறிப்பிட்டுள்ளசெய்தி தான். விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்துக்கு முன்வந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இலங்கை அரசும் போர் நிறுத்தம் செய்து மக்களை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டுவர வேண்டும். இதற்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பும் தேவை.

தொண்டு நிறுவனங்கள் அவர்களுக்கு மருத்துவ வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அடுத்து அரசியல் தீர்வாக இலங்கையில் அனைத்து மாகாணங்களுக்கும் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க வேண்டும்.

அனைத்து மக்களுக்கும் சமவுரிமை கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அந்த அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும். குறிப்பாக தமிழ் மக்களுக்கு இலங்கையின் சட்டத்திற்கு உட்பட்டு இறையாண்மை பாதிக்காத அளவில் அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். பிரணாப் முகர்ஜி இப்படிப் பேசியது மட்டுமல்ல, டில்லியில் இருந்து அறிக்கையாகவும் இதை வெளியிட்டிருக்கிறார்.

அந்த அறிவிப்பில் சோனியாவின் கருத்தும், பிரதமர் மன்மோகன் சிங்கின் கருத்தும் கலந்திருக்கின்றன என்பதை சொல்லவும் வேண்டுமோ? இலங்கைத் தமிழர்களை வாழவைக்கவும் அவர்களது உரிமைகளையும் நிலைநாட்டவும் தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளின் சார்பிலும், அரசு சார்பிலும் எடுத்த முயற்சிகளுக்கு பலன் கிடைத்தது போல, இந்திய அரசின் போர் நிறுத்த வலியுறுத்தல் எனக்கு மருத்துவ சிகிச்சை வெற்றியைப் போன்ற மன ஆறுதலை அளிக்கிறது.

ஆனால் இந்த நேரத்தில்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையை மாசாக்கி, மண்ணாக்கி, காசாக்கி, அரசியலில் நாணயத்தை தூசாக்கி வாழும் சில வக்கிர மூளையினர், தாங்கள் வகித்த பொறுப்புகளுக்கு தகுதியற்றோர் என்று காட்டிக் கொள்ள பிரணாப் வருகையை எதிர்த்து மறியல் ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு, நாகரிகக் கேடாக பிரணாப்பின் படங்களுக்கும் தீயிட்டு பார்த்து திருப்தியடைந்துள்ளனர்.

யார் அவர்கள் ! சிங்களத் தலைமையாளர் ராஜபக்ஷ, தமிழர்கள் மீது நடத்தும் படுகொலைக்கு நியாயவாதம் எடுத்து உரைத்த ஜெயலலிதாவின் பாதார விந்தங்களே, தமக்கு ஆதார அடிபீடங்கள் என அர்ச்சித்துக் கொண்டிருப்பவர்கள் அந்த ‘அம்மா’ ஜெயாவின் அத்யந்த சீடர்கள். இலங்கைப் பகைவர்களை விட்டு விட்டு இந்தியத்தலைவர்களின் படங்களிற்கு தீயிட்டுக் கொளுத்துகின்றனர் என்றால் தேச பாதுகாப்புக்கான சட்டரீதியான நடவடிக்கைகள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்குமா ? முடியாது . முடியவே முடியாது. இலங்கைத்தமிழர்களுக்கு அதிகாரமும் அங்கே அமைதியும் கிடைத்து அவர்கள் வாழ நாம் தமிழ் உணர்வோடு பணிபுரிகின்றோம். அதில் கிடைக்கும் வெற்றிக்காக காத்து நிற்கின்றோம். மத்திய அரசுடன் இணைந்து இலங்கையில் போர் நிறுத்தம் இப்போதே கேட்கிறோம். இந்த உலகில் பெரியதேசமாம் இந்தியா கேட்கிறது.

பிரணாப் கேட்டுள்ளார். நாமும் கேட்கின்றோம். போரை நிறுத்து என்று மத்திய அரசிடமிருந்து மார்ச் முதல் நாள் புறப்பட்டுள்ளது அந்த வாசகம். மருத்துவ மனையில் இருந்து



நான் மட்டுமல்ல, என் பழைய நண்பர் வாஜ்பாயும் நலன் பெற்று வெளிவரும் நாள்.

சென்னையில் ஸ்ராலின் இளைஞர் அணி சார்பில் உருவாக்கிய அன்பகம் எனும் அழகு மாளிகையும் இந்த நாளில் திறக்கப் படுகிறது. நான் பொருளாளராக இருந்து அண்ணா திறந்து வைத்த இந்த அன்பகம் இன்று புதுப்பிக்கப்பட்டு விரிவாக்கப்பட்டு பெரிய மாளிகையாக ஸ்ராலின் பொருளாளராக இருக்கின்ற நேரத்தில் திறக்கப்படுகின்றது.

இந்நாளில் அனைவர் அகமும் பகையும் புகையும் அகன்று அன்பகங்களாக மாறட்டும். இவ்வாறு கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

(ச-3,5)

## மனித உரிமை மீறல்கள்...

மனித உரிமை மீறல்கள் மோசமடைந்து வருகின்றன.

போர் தீவிரமடைந்ததை தொடர்ந்து இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன. அரசின் இந்த மனித உரிமை மீறல்களினால் அதிகளவில் தமிழ் மக்களே பாதிப்படைந்துள்ளனர்.

அரசுடன் இணைந்து செயற்படும் குழுவினரே நீதிக்குப் புறம்பான படுகொலைகளில் ஈடுபட்டு வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சிறார்களை படையில் சேர்ப்பது, காணாமல் போதல், எழுந்தமானமான கைதுகள், தடுத்துவைத்தல், தரமற்ற சிறைக்கூடங்கள், கைது செய்யப்படுபவர்களை நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு மறுப்பு தெரிவித்தல், அரசின் ஊழல், சிறுபான்மை மக்களுக்கு எதிரான பாகுபாடுகள் என்பன இலங்கையில் அதிகரித்துள்ளன என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

(ச-5)

## கொமாண்டோ அணிகளைக்...

போது அதிகாரி ஒருவர் உட்பட 7 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 7 பேர் காயமடைந்துள்ளனர். இதன் பின்னர் அந்த அணியில் இருந்த கரும்புலி வீரர் ஒருவர் 11 ஆவது கெமுனு வோச் பற்றலியனின் கட்டளை அதிகாரி மேஜர் திசந்த பெர்னாண்டோ பயணம் செய்த ஜீப் ஊர்தி மீது தாக்குதலை நடத்தினார்.

இத்தாக்குதலின் போது வாகனத்தின் சாரதி கொல்லப்பட்டார். ஆனால் கட்டளை அதிகாரி அந்த வாகனத்தில் பயணம் செய்யாததால் உயிர் தப்பியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-1)

## ஐ.நா. கூட்டத் தொடரில்...

கூடிய சாத்தியக் கூறுகள் தென்படவில்லை என அமைச்சர் கூறினார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப் படைகளுக்கும் இடையிலான மோதல்களால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் யு.என்.எச்.சி.ஆரின் மாநாடு இன்று ஆரம்பமாகிறது.

இடம்பெயர்ந்த மக்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கை மற்றும் மனித உரிமைகளில் முன்னேற்றம் ஏற்படுத்துவதற்கு கடந்த வருடம் முன்வைத்த யோசனைகளின் தற்போதைய நிலைமைகள் பற்றி ஜெனீவா செல்லும் அமைச்சர் விளக்கமளிக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

ஜெனீவா செல்லும் இலங்கையின் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, ஐரோப்பிய ஒன்றியம்,அமெரிக்கா, இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கையின் பிந்திய நிலைவரங்கள் குறித்து விளக்கமளிப்பார் என அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது.

இலங்கையில் என்ன நடைபெறுகிறது என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம் என்றார் அமைச்சர்.

மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவை இலங்கைக்கு அனுப்புவது என்ற விடயத்துக்கு தாம் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவிப்பதாக அமைச்சர் சமரசிங்க குறிப்பிட்டார்.

மனித உரிமைகள்ஆணைக்குழுவின் வழமையான அமர்வுகள் இன்று ஆரம்பமாகி இம்மாதம் 27 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்த அமர்வுகளில் அமைச்சர் சமரசிங்கவுடன் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் ரஜீவ விஜயசிங்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ச-5)

## வன்னியில்...

காயமடைந்துள்ளனர்.

இதேவேளையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று காலை 5.40 மணி தொடக்கம் ஆட்லறி எறிகணை மற்றும் பல்குழல் வெடிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதில் 5 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 20 பேர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களினதும் காயமடைந்தவர்களினதும் பெயர் விபரங்கள் வெளியாகவில்லை.

(ச-5)

# இராணுவ வெற்றியின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு வராது

## பிரணாப் முகர்ஜி மீண்டும் வலியுறுத்தல்

இராணுவ வெற்றியின் மூலம் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணமுடியாது. இலங்கையின் அரசியல் சட்ட திருத்தத்தை அமுல்படுத்தி அதிகார பகிர்வை வழங்க வேண்டும்.

எனவே இலங்கையில் போர் நிறுத்தம் செய்யும்படி அந்நாட்டு அரசை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய பிரணாப் முகர்ஜி கூறியதாவது;

விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கம். எந்தவொரு தீவிரவாத இயக்கத்திடமும் எங்களிற்கு அனுதாபம் கிடையாது. ஆனால் அப்பாவிப் பொதுமக்கள் பலியாகாமல் தடுப்பதற்காக விடுதலைப்புலிகள் அளித்துள்ள வாய்ப்பைப்பயன்படுத்தி இலங்கை அரசும் போரை நிறுத்த முன்வரவேண்டும். இராணுவ வெற்றியின் மூலம் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணமுடியாது.

இலங்கையின் அரசியல் சட்டத்திருத்தத்தை அமுல்படுத்தி அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டும். இலங்கையின் வடபகுதியில் போரில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக தற்காலிக மருத்துவ மனை அமைக்கவேண்டும். இவ்வாறு பிரணாப் முகர்ஜி கூறினார்.

(ச-5)

## 7 ஆயிரம்...

ஊர்வலம் சென்றடைந்தது.

சுமார் 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்தில் இலங்கை அரசு பயங்கரவாத அரசு, அனைத்துலக சமூகமே இலங்கைக்கு ஆதரவு வழங்காதே போன்ற முழக்கங்களை எழுப்பியபடியும், தாயகத்தின் அவலங்களை விளக்கும் பதாகைகளை உயர்த்திப் பிடித்தபடியும் கண்டன ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தின் இறுதியில் ஒழுங்கமைப்பாளர்களில் ஒருவரான எல்.ஜி.மெலானியும் மாணவியான செல்வி பிராணாவும் உரையாற்றினர்.

(ச-5)

## இந்தியாவின் கோரிக்கையை...

போர் நிறுத்தத்திற்கு தயார் என தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அழைப்பை இலங்கை அரசாங்கம் மீண்டும் ஒருமுறை நிராகரித்துள்ளது.

சர்வதேசத்தின் கோரிக்கைக்கு அமைய தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைய வேண்டும்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் சண்டைகள் இருக்காது. மோதல்கள் தானாகவே நின்றுவிடும் என இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன்ன தெரிவித்தார். இலங்கையில் மோதல்கள் நிறுத்தப்பட்டு மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்படவேண்டுமெனவும், அண்மையில் விடுதலைப்புலிகள் விடுத்த போர் நிறுத்தக் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பாலித கோஹன்ன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால் பொதுமக்களை வெளியேற்றுவது சுலபமாகிவிடும் என வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இதனால்தான் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைக்குமாறு கோரிக்கை விடுக்குமாறு சர்வதேச சமூகத்திடம் தாம் கூறி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.